REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுன் 16 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 140 | Thursday 16, June, 2022 | 12 பக்கங்கள் | 40/-

MOBILE
வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
OOKLA® தடையற்ற தொடர் வெற்றியை கடந்த 3 வருடங்களாக SLT-MOBITEL பதிவு செய்துள்ளது!
SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

## இந்திய சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் திட்டங்களை தயாரிக்கவும்

### பலாலி விமான நிலையத்தை மீள ஆரம்பிக்கவும் பிரதமர் பணிப்பு



இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் திட்டத்தைத் தயாரிக்குமாறு அதிகாரிகளை அறிவுறுத்திய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். 2022 ஆம் 08

மேலும் ஒரு இலட்சம் மெற்றிக்தொன்:

## சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்ய விரைவான நடவடிக்கை

### லிற்றோ கேஸ் நிறுவனத்தின் புதிய தலைவர் முதித்த பீரிஸ் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் சமையல் எரிவாயுவுக்கான தேவையை கருத்திற்கொண்டு மேலும் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிற்றோ கேஸ் நிறுவனத்தின் புதிய 08

## 21 ஆவது திருத்தத்துக்கு முன் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு அவசியம்

### முன்னாள் பிரதமர் மஹிந்த வலியுறுத்து



21 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்னர் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி பாராளுமன்றத்தை பலப்படுத்தும் வழிமுறை 21 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டால் ஸ்ரீலங்கா 08

ஆட்பதிவு, குடிவரவு குடியகல்வு, மோட்டார் திணைக்களம் உட்பட

# மாவட்ட, பிரதேச மட்டத்தில் அரச சேவைகளை முன்னெடுக்கவும்

### இன்றைய காலகட்டத்தில் அவசியமானது என வலியுறுத்து



### ஆளுநர்கள், மாகாண செயலாளர்கள், அரச அதிபர்களிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றுவதைப் போன்று, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் அனைத்து அரச சேவைகளையும் பரவலாக்குவது காலத்தின் தேவையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆட்களைப் பதிவு செய்தல், குடிவரவு, குடியகல்வு மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் உள்ளிட்ட பிற அரச நிறுவனங்களையும் மேலும் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பரவலாக்குவதன் மூலம் அந்த சேவைகளை மிகவும் திறமையாக வழங்க முடியும். இவ்வாறான முக்கிய நிறுவனங்களை ஒன்றோடொன்று இணைப்பதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். 08

லண்டனிலிருந்து கொழும்பு நோக்கி வந்த

## ஸ்ரீலங்கன் விமானியின் சாதுரியத்தால் பாரிய விமான விபத்து முறியடிப்பு



### 275 பயணிகளை காப்பாற்றிய விமானிக்கு பாராட்டு குவியல்

லோரன்ஸ் செல்வநாயகம்

லண்டனில் இருந்து கொழும்பு நோக்கி திங்கட்கிழமை (13) பயணத்தை மேற்கொண்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் யு.எல் 504 என்ற விமானம் நடுவானில் ஏற்படவிருந்த பாரிய விபத்தை தவிர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் குறித்த விமானம் பாதுகாப்பாக இலங்கை வந்து தரையிறங்கியது.

இந்த விமானம், 275 பயணிகளுடன் லண்டனிலிருந்து கட்டுநாயக்க நோக்கி பயணத்தை ஆரம்பித்தது. சுமார் 33,000 அடி உயரத்தில் அது பறந்துகொண்டிருந்தபோது, பிரிட்டிஷ் எயார்வேய்ஸுக்கு சொந்தமான விமானம் 08

## சனத் நிஷாந்த MP உட்பட மூவருக்கு நேற்று பிணை



03

## மருந்து தட்டுப்பாட்டுக்கு ஆறு வாரங்களுக்குள் தீர்வு



நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை எதிர்வரும் 6 வாரங்களுக்குள் முழுமையாக நிவர்த்தி செய்ய முடியும் என சுகாதார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மருந்துகளை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு 08

## ரயில் கட்டணங்களை அதிகரிக்க உத்தேசம்

### அரசின் அனுமதி கிடைத்ததன் பின் நடவடிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

ரயில் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டுமென ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார். அதிகரித்து 08

எரிபொருளுக்கான தட்டுப்பாடு:

## அடுத்துவரும் நாட்களில் மோசமாக அதிகரிக்கும்



### CPC உள்ளக தகவல்கள் தெரிவிப்பு

எதிர்வரும் நாட்களில் டீசல் மற்றும் பெற்றோல் தட்டுப்பாடு அதிகரிக்கும். இதனால் நாட்டில் எரிபொருள் வரிசைகள் மேலும் 08

## CEB முன்னாள் தலைவர் குறித்து அடுத்தவாரம் முடிவு

### கோப்குழுவின் தலைவர் சரித்த ஹேரத் தெரிவிப்பு



கோப்குழுவில் சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்து பின்னர் அதனை வாபஸ் பெற்றுக்கொள்வதாக அறிவித்திருந்த இலங்கை மின்சாரசபை முன்னாள் தலைவர் 08



## 90 வீதமான தனியார் பஸ்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

கெமுனு விஜேரத்ன தெரிவிப்பு 03



## அரிசி பதுக்குவோர் குறித்து 1977க்கு அறிவிக்கவும்

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை 03



நாட்டில் தனியார் மருந்தகங்களில்

## மருந்துகளை கொள்வனவு செய்யும் அரச வைத்தியசாலைகள்

தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தகவல் 03

## SLPP எந்தவொரு கட்சியுடனும் இணையாது

### கட்சியின் செயலாளர் சாகர உறுதி



லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுஜன பெரமுன கட்சி நாட்டின் பெரும்பான்மை பலம்கொண்ட அரசியல் கட்சியாகும். அந்தக் கட்சியைக் கைவிட்டு வேறு கட்சியொன்றுடன் 08

## ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன்


### 105 மணி நேரம் போராடி மீட்பு



இந்தியாவில் மத்திய பிரதேசத்தில் உள்ள சத்தீஸ்கரில் ஆழ்துளை கிணற்றில் விழுந்து 105 மணி நேரத்திற்கும் மேலாக போராடிய சிறுவன் பத்திரமாக 08

பொருளாதார முன்னேற்றத்திற்காக:

## அமெரிக்கா 120 மில். டொலரை இலங்கைக்கு வழங்க முடிவு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அமெரிக்கா 120 மில்லியன் டொலரை இலங்கைக்கு கடனாக வழங்கவுள்ளது.

அமெரிக்காவின் சர்வதேச நிதி 08

## இழுவைப் படகுகளை கட்டுப்படுத்தவும்

### தமிழக முதல்வருக்கு யாழ். மீனவர்கள் கடிதம்



இராமேஸ்வரம் இழுவைப் படகுகளை கட்டுப்படுத்தக் கோரி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் 08

## லிற்றோ Gas ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கும்?

### நிறுவனம் எதிர்வுகூறுகிறது



லோரன்ஸ் செல்வநாயகம்

சமையல் எரிவாயு விலையை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்படி சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 08

**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

FUN BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.360/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது
4G SIM அட்டையுடன் 4G ஸ்மார்ட்போன் அவசியமாகும்
TRC/D/PRO/20/10
Dialog
எதிர்காலம் இன்றே.

# சர்வதேச செய்திகள்

## பச்லெட் மீண்டும் போட்டியிடவில்லை




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தனிப்பட்ட காரணங்களுக்காக அந்தப் பதவியில் இரண்டாவது தவணைக்கு போட்டியிடுவதில்லை என்று அறிவித்துள்ளார். கடந்த மாதம் அவரது சீனா விஜயத்துடன் தொடர்புபட்டு இந்த முடிவை எடுத்ததாக வெளியாகும் கூற்றை அவர் நிராகரித்துள்ளார்.

70 வயதான பச்லெட்டின் சீனா விஜயம் உரிமைக் குழுக்கள் மற்றும் மேற்கத்திய அரசுகளின் விமர்சனத்துக்கு உள்ளானது.

“சீனாவுக்கு செல்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே நான் இந்த முடிவை எடுத்திருந்தேன். இதனை நான் எனது தலைவரான பொதுச் செயலாளருக்கு (அன்டொனி குட்டரெஸ்) அறிவித்துவிட்டேன்” என்று அவர் குறிப்பிட்டார்.

## கனடா–டென்மார்க்கின் விஸ்கிப் போர் முடிவு




சிறிய, மனிதர்கள் வாழாத ஆர்டிக் தீவு ஒன்றின் உரிமை பற்றி 50 ஆண்டுகள் நீடிக்கும் சச்சரவுக்கு டென்மார்க் மற்றும் கனடாவுக்கு இடையே தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இந்த ஹான்ஸ் தீவுக்காக இரு நாடுகளும் 1971 தொடக்கம் விஸ்கி போரில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த இரு நாடுகளும் 1.2 சதுர கிலோமீற்றர் பனிக்கட்டிப் பாறையில் தமது உரிமையை நிலைநாட்ட பரஸ்பரம் மது போத்தல்களை நட்டு வைத்து விட்டு வந்தன.

இந்நிலையில் இந்த தீவை சரிபாதியாக பிரித்துக் கொள்வதற்கு இணக்கம் எட்டப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## புகலிடம் கோருவோரின் பிரிட்டன் விமானம் ரத்து



புகலிடக் கோரிக்கையாளர்களை பிரிட்டனில் இருந்து ருவாண்டாவுக்கு அனுப்பும் விமானப் பயணம் சட்டத் தீர்ப்பால் கடைசி நேரத்தில் கடந்த செவ்வாயன்று ரத்துச் செய்யப்பட்டது.

இவ்வாறு ஏழு பேர் வரை கிழக்கு ஆபிரிக்க நாட்டுக்கு வெளியேற்றப்படவிருந்தனர்.

எனினும் இந்த நடவடிக்கைக்கு எதிராக மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் பிரிட்டன் நீதிமன்றங்களில் கடைசி நேரத்தில் சவால் விடுத்தது.

இது ஏமாற்றம் தருவதாகக் குறிப்பிட்டிருக்கும் பிரிட்டன் உள்துறை அமைச்சர் பிரீத்தி படேல், “அடுத்த விமானத்துக்கான ஏற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்படுகிறது” என்றார். ருவாண்டாவுக்கு முதலில் 130 பேரை அனுப்பத் திட்டமிடப்பட்டிருந்தது. அது தற்போது 7 ஆக குறைந்துள்ளது.

# பைடன் மத்திய கிழக்கு விஜயம்




அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முதல் முறை மத்திய கிழக்கிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். வரும் ஜூலை 13 தொடக்கம் 16 வரை நான்கு நாட்கள் இந்த சுற்றுப்பயணம் இடம்பெறவுள்ளது.

2021 ஜனவரியில் பைடன் பதவி ஏற்றது தொடக்கம் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலின் குடியேற்றங்களை வெள்ளை மாளிகை கண்டித்து வருவதோடு, பலஸ்தீனர்கள் தமக்கான ஆதரவை கோரி வருகின்றனர். ஊடகவியலாளர் ஜமால் கசோக்கியின் கொலை சவூதி அரேபியா மற்றும் அமெரிக்கா இடையிலான உறவில் முறுகலை ஏற்படுத்தியது. இதில் சவூதி முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மானையும் அவர் சந்திக்கவுள்ளார்.

கசோக்கியின் கொலையில் முஹமது பின் சல்மானுக்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனங்கள் தமது விசாரணையில் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் முஹமது பின் சல்மான் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்தார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடன் பின் சல்மான் நெருங்கிய உறவை பேணியபோதும் பைடன் பதவிக்கு வந்த பின் அதில் இடைவெளி ஏற்பட்டது. புதிய ஜனாதிபதி சவூதி அரேபியாவுடனான உறவை “மறுசீரமைக்க விரும்புவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

எனினும் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்திருப்பதே சவூதியுடன் நெருக்கமான உறவை பேணுவதற்கு பைடன் நிர்வாகத்துக்கு அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

சவூதி பயணத்துக்கு முன்னர் பைடன் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது இஸ்ரேலில் இருந்து நேரடியாக சவூதிக்கு விமானத்தில் பயணிக்கவுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் இஸ்ரேலில் இருந்து விமானம் மூலம் நேராக சவூதிக்கு பயணிப்பது இது முதல் முறையாக இருக்கும்.

## தேநீர் குடிப்பதைக் குறைக்க பாக். மக்களிடம் கோரிக்கை



நாட்டின் பொருளாதாரத்தை தடைப்படாமல் வைத்திருக்க தேநீர் குடிக்கும் அளவை குறைத்துக்கொள்ளும்படி பாகிஸ்தான் மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறைந்த எண்ணிக்கையான கோப்பைகளை குடிப்பது அதிக இறக்குமதிச் செலவை குறைக்கும் என்று மூத்த அமைச்சரான அஹசான் இக்பால் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அந்நியச் செலாவணி கையிருப்பு மிகக் குறைவாகக் காணப்படுகிறது. அனைத்து இறக்குமதிகளுக்கும் இரண்டு மாதங்களுக்கு குறைவான காலத்திற்கே அந்நியச் செலாவணி உள்ளது.

உலகின் மிகப்பெரிய தேயிலை இறக்குமதி நாடாக இருக்கும் பாகிஸ்தான் கடந்த ஆண்டில் 600 மில்லியன் டொலர்களுக்கு மேல் பெறுமதியான தேயிலையை வாங்கியுள்ளது.

“தேயிலையை நாம் கடனாக இறக்குமதி செய்வதால் தேநீர் அருந்துவதை ஒன்று, இரண்டு கோப்பைகளுக்குக் குறைத்துக்கொள்ளும்படி நாட்டு மக்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்” என்று இக்பால் குறிப்பிட்டுள்ளார்.

## சூடான் பழங்குடியினர் மோதல்: 145 பேர் பலி



சூடானில் பழங்குடியினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது 145 பேர் கொல்லப்பட்டு மேலும் 180 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

மேற்கு டாபுர் மற்றும் தெற்கு கொர்டோபான் மாகாணங்களில் இடம்பெற்ற இந்த வன்முறைகள் அண்மைய ஆண்டுகளில் பதிவான மிக மோசமான ஒன்றாக உள்ளது.

இதில் மேற்கு டாபுரின் குல்பாஸ் நகரில் அரபு மற்றும் ஆபிரிக்க பழங்குடியினருக்கு இடையே நிலம் தொடர்பாகவே அண்மைய மோதல் வெடித்ததாக மனிதாபிமான விவகாரங்களின் இணைப்புக்கான ஐ.நா அலுவலகம் தெரிவித்துள்ளது. இதன்போது உள்ளூர் அரபு ஆயுதக் குழுக்கள் பல்வேறு கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

இந்த மோதல்கள் ஒரு வாரம் நீடித்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் குறைந்தது 25 கிராமங்கள் தாக்கப்பட்டு, சூறையாடப்பட்டு மற்றும் தீவைக்கப்பட்டிருப்பதோடு குறைந்தது 50,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## 'குரங்கம்மை' நோயின் பெயரை மாற்ற திட்டம்



குரங்கம்மை நோய்க்கு புதிய பெயர் ஒன்றை வைப்பதற்கு உலக சுகாதார அமைப்பு நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.

வைரஸ் மற்றும் அது ஏற்படுத்தும் நோய்க்கு “பாரபட்சமற்ற மற்றும் களங்கப்படுத்தாத பெயர் ஒன்று அவசியமாக உள்ளது” என்று 30 விஞ்ஞானிகள் கடந்த வாரம் கடிதம் ஒன்றை எழுதிய நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸை ஆபிரிக்கருடையது என்று குறிப்பிடுவது தவறானது மற்றும் பாரபட்சமானது என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட சுமார் 1,600 சம்பவங்கள் உலகெங்கும் பதிவாகியுள்ளன.

குரங்கம்மை ஏற்கனவே நிரந்தர நோயாகக் கருதப்படும் நாடுகளில் 72 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ள 32 நாடுகளில் யாரும் அந்நோயால் மரணமடையவில்லை.

## மெக்சிகோவில் தங்கத்துடன் 20 கொள்கலன்கள் திருட்டு




மெக்சிகோ துறைமுகம் ஒன்றில் பகுதி சுத்திகரிக்கப்பட்ட தங்கம், வெள்ளித் தாது மற்றும் தொலைக்காட்சி தொகுதிகள் நிரப்பப்பட்ட 20 சரக்குக் கொள்கலன்கள் திருடப்பட்டுள்ளன.

மன்சனில்லோ நகரில் இருக்கும் பசிபிக் கடல் துறைமுகத்தில் ஆயுதம் ஏந்தியவர்கள் இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை “நூற்றாண்டின் மிகப்பெரிய திருட்டு” என்று உள்ளூர் ஊடகங்கள் விபரித்துள்ளன.

துறைமுகத்தின் பாதுகாவல் குழுக்களைத் தாக்கிய பின்னர், தாக்குதல்தாரிகள் பாரந்தூக்கிகள், சரக்கு வண்டிகள் ஆகியவற்றைக் கொண்டு கொள்கலன்களை நகர்த்தினர். திருட்டு 8 முதல் 10 மணி நேரத்திற்கு நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது போன்ற திருட்டுச் சம்பவம் நடந்ததே இல்லை என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கூறினார். ஆயுததாரிகள் பொருட்களைத் தேர்ந்தெடுத்துத் திருடியதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வளவு தங்கம், வெள்ளி திருடப்பட்டது என்ற விபரங்கள் அளிக்கப்படவில்லை.

## ஆபாச படத்தில் நடிப்போரை பாதுகாக்க ஜப்பானில் சட்டம்



ஆபாசப் படங்களில் தோன்றுபவர்களை அழுத்தத்தில் இருந்து பாதுகாப்பதற்கு ஜப்பானில் முதல் முறை சட்டம் ஒன்று நேற்று புதன்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பல பில்லியன் டொலர் வருவாய் ஈட்டும் துறையில் உள்ள சுரண்டலை எதிர்த்து போராடுவதற்கான முக்கிய நடவடிக்கை என்று இந்த சட்டம் வரவேற்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்படி ஆபாசப் படங்களில் தோன்றுபவர்கள் எந்தக் காரணமும் கூறாது ஓர் ஆண்டுக்குள் தமது ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவும் தண்டப் பணம் செலுத்துவதை தவிர்ப்பதற்கும் அனுமதி அளிக்கிறது.

இது நிகழும் பட்சத்தில் அந்த வீடியோவை அழிப்பதற்கு மற்றும் மீளப்பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் வயது வந்தோரின் வயது 20 இல் இருந்து 18 ஆக குறைக்கப்பட்டதை அடுத்தே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆபாச திரைப்பட தயாரிப்பாளர்கள் 18 மற்றும் 19 வயதுடையவர்களை பணியில் அமர்த்த முயற்சிக்கலாம் என்ற கவலை அதிகரித்துள்ளது.

## பாகிஸ்தானில் 12 மணி நேர மின் வெட்டு



பாகிஸ்தானின் பல பகுதிகளில் 12 மணிநேர மின்சாரத் தடை நடப்புக்கு வந்துள்ளது. உக்ரைனியப் போர் காரணமாக உலக அளவில் உயர்ந்துள்ள எரிபொருள் விலை அதற்குக் காரணமாகும்.

பாகிஸ்தானின் முக்கிய மின் உற்பத்தி ஆலைகளுக்குத் தேவையான இயற்கை எரிவாயு, போதுமான அளவில் கிடைக்கவில்லை. வழக்கமான அளவில் அவற்றால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை.

அதனால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட மின்சாரத் தடை நாடெங்கும் தினமும் அமுல்படுத்தப்படுகிறது.

எரிபொருளையும் மின்சாரத்தையும் மிச்சப்படுத்த பாகிஸ்தானின் மூன்றாவது மிக அதிக மக்கள்தொகையைக் கொண்ட மாநிலத்தில் வித்தியாசமான அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

அங்குள்ள பொதுத்துறை ஊழியர்கள் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வீட்டிலிருந்தே வேலைசெய்யும் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

ஆனால் பொலிஸ், பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்றவை வழக்கம்போல் செயல்படும்.

முன்னதாக இம்மாத ஆரம்பத்தில் சனிக்கிழமையை வேலை நாள் பட்டியலிலிருந்து அரசாங்கம் அகற்றியது.

அரச துறை ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் எரிபொருளின் அளவும் சுமார் 40 வீதம் குறைக்கப்பட்டது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜுன் 16 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.32 |
| லுஹர் | 12.12 |
| அஸர் | 03.39 |
| மஃரிப் | 06.27 |
| இஷா | 07.44 |

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஆனி 02

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# அரிசி பதுக்குவோர் குறித்து 1977க்கு அறிவிக்கவும்

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரிசியை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் மற்றும் அதன் மூலம் அரிசிக்கான செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த முனைபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறானவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக சில தொலைபேசி இலக்கங்களையும் அந்த அதிகார சபை வழங்கியுள்ளதுடன் அலுவலக நேரங்களில் 1977 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை முன்வைக்க முடியுமென அதிகார சபை தெரிவித்துள்ளது. நுகர்வோர் அதிகார சபை, மேல் மாகாணம் மற்றும் ஊவா மாகாணங்களின் உதவிப் பணிப்பாளர்களுக்கு முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக 077 1088895 என்ற தொலைபேசி இலக்கத்தையும் வடக்கு மற்றும் வடமேல் மாகாண மக்கள் முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக 077 1088914 என்ற இலக்கத்தையும் தென் மற்றும் சப்ரகமுவ மாகாண மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காக 077 1088903 என்ற இலக்கத்தையும் வழங்கியுள்ளது.

அத்துடன் வட மத்திய மாகாண மக்கள் 077 1088902 மற்றும் மத்திய மற்றும் கிழக்கு மாகாண மக்கள் 077 1088904 என்ற இலக்கங்களையும் பயன்படுத்தி நுகர்வோர் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அதிகார சபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

# பதில் வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்தன நியமனம்



பதில் வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி முன்னிலையில் பதில் வெளிவிவகார அமைச்சராக அவர் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக தினேஸ் குணவர்தன பதவி வகித்து வருகின்றார்.

இந்நிலையில், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஜெனீவா சென்றுள்ள நிலையில், பதில் வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஸ்ரீலங்கனின் கடந்த வருட நட்டம் 45,000 மில்லியன்

## கோப் குழு அறிக்கையில் தகவல்

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் கடந்த வருடத்துக்கான தேறிய நட்டம் 45,674 மில்லியன் ரூபா என அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் இத்தகைய நட்டத்தை எதிர்நோக்கிய தருவாயிலும் கூட, உயர் முகாமைத்துவ அதிகாரி ஒருவருக்காக மாதாந்தம் 3.1 மில்லியன் ரூபாவை சம்பளமாக செலுத்தியுள்ளனர்.

இந்தக் கொடுப்பனவுகளுக்கான நிதி, அமைச்சரவை பத்திரம் மற்றும் பொது நிதி ஊடாக வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கோப் குழு அவதானம் செலுத்தியுள்ளது.

2020 ஆம் ஆண்டில் திறைசேரி ஊடாக மேலதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ள அதேவேளை, ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அதனை முறையாக பயன்படுத்தியிருந்தால் இத்தகைய நிலைமை உருவாகியிருக்காது என கோப் குழு கருத்து வெளியிட்டுள்ளது.

நஷ்டத்தில் இயங்கும் தேசிய விமான நிறுவனமொன்றை, நடைமுறைக்கு மாறான திட்டங்கள் ஊடாக தொடர்ந்தும் பொதுமக்களின் வரிப்பணத்தில் கொண்டு நடத்த வேண்டுமா என்பது குறித்து தீவிர அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று கோப் குழு தமது அறிக்கையில் கூறியுள்ளது.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பிரேத அறை கூலர் செயலிழப்பு

## சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலுள்ள சடலங்களை பாதுகாப்பாக வைத்திருக்கும் குளிரூட்டி (கூலர்) இரண்டு வார காலமாக பழுதடைந்து காணப்படுவதால் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதாக உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுவரை காலமும் இயக்க நிலையில் காணப்பட்ட கூலர் பழுதடைந்திருப்பதால் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய சடலங்களை சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் நிலை காணப்படுகிறது. சடலங்களை அனுப்புவதற்கான போக்குவரத்துச் செலவையும் உயிரிழந்தவர்களின் உறவுகளே ஏற்க வேண்டியிருப்பதால் தற்போது நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி அதிகரிப்புக்கு மத்தியில் இவ்வாறான செயற்பாடு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். தயாளினியை தொடர்பு கொண்டு வினவிய போது, குளிரூட்டியை கொழும்பிலுள்ள நிறுவனமே பழுதுபார்க்க வேண்டி இருப்பதாகவும்,அது தொடர்பாக ஏற்கனவே உரிய நிறுவனத்துக்கு அறிவித்திருப்பதாகவும் தெரிவித்தார்.அந்த நிறுவனம் ஏற்கனவே ஒரு முறை வந்து நிலைமையை ஆராய்ந்து சென்றதாகவும் மீண்டும் இன்று அல்லது நாளை குளிரூட்டியை பழுதுபார்க்க வருவதாகவும் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிக்கல்கள் தொடர்பில் அவர்களால் வரமுடியாத நிலை இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

08

குறைந்த வருமானம் பெறும்

# விவசாய குடும்பங்களுக்கு இலவசமாக யூரியா உரம்

## WFP மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கு யூரியா உரம் ஒரு பைக்கற்றை இலவசமாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக விவசாய அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். உலக உணவு திட்டம் மற்றும் விவசாய அமைப்புடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட விவசாய குடும்பங்களுக்கு 2022, 2023 பெரும்போக நெற் பயிர்ச் செய்கைக்காக குடும்பத்துக்கு ஒரு பைக்கற் யூரியா உரம் என்ற வகையில் 3,65,000 யூரியா உர பைக்கற்றுக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு அந்த அமைப்பு உறுதியளித்துள்ளதுடன் அது தொடர்பில் இலங்கையிலுள்ள அந்த அமைப்பின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை

08

# 90 வீதமான தனியார் பஸ்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

## கெமுனு விஜேரத்ன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேற்று முதல் 90 வீதமான பஸ்களை சேவையிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக தனியார் பஸ் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இந்தநிலை ஏற்படுமானால் தனியார் பஸ் சேவையை முற்றாக முடக்க நேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பல்வேறு வகைகளில் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் பெற்றுத் தருவதாக தெரிவிக்கப்பட்ட போதும் போதியளவு எரிபொருள் இல்லாமையினால் நேற்று முதல் 90 வீதமான பஸ்களை இடைநிறுத்த நேர்ந்துள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களின் மூலம் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற

08

நாட்டில் தனியார் மருந்தகங்களில்

# மருந்துகளை கொள்வனவு செய்யும் அரச வைத்தியசாலைகள்

## தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தகவல்



அரச வைத்தியசாலைகளுக்கும் தனியார் மருந்தகங்களில் இருந்து தற்போது மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல அத்தியாவசிய மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் பொருளாளர் மஞ்சுள ஜயவர்தன தெரிவித்தார்.

அவசர விபத்து ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவருக்கு சாதாரண சேலைனை

08

8 இலட்சம் டொலர் பெறுமதியான

# மருத்துவ உபகரணங்கள் சீனா இலங்கைக்கு நன்கொடை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் சீன அரசாங்கத்தின் அனுசரணையுடன் இலங்கைக்கு ஒரு தொகை மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

நேற்றைய தினம் 8 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென் ஹோங்கினால் நேற்றைய தினம் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் சுகாதார அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறுவர் மற்றும் மகப்பேற்று மருத்துவமனைகளுக்கு தேவையான மருத்துவ உபகரணங்களும் இவற்றுள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ)

# சனத் நிஷாந்த MP உட்பட மூவருக்கு நேற்று பிணை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சனத் நிஷாந்த எம்.பி, சமன்லால் பெர்ணான்டோ உள்ளிட்ட மூவருக்கு நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும்

08

# பயணத் தடையை தளர்த்தியது நியூஸிலாந்து



இலங்கைக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு நியூஸிலாந்து அரசாங்கம் அதன் பிரஜைகளுக்கு விடுத்திருந்த பயண வழிகாட்டல், தற்போது 'அதிக அவதானத்துடன் செயற்படுங்கள்' என்ற ஆலோசனை மூலம் தளர்த்தப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது கடந்த மேமாதம் 9 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து நாடளாவிய ரீதியில் பதிவான வன்முறை சம்பவங்களின் காரணமாக இலங்கைக்கு பயணங்களை மேற்கொள்வது குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட பல உலகநாடுகள் பயண வழிகாட்டல்கள் ஊடாகத் தமது பிரஜைகளிடம் வலியுறுத்தியிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் பிரிட்டன் இலங்கைக்கான அதன் பயண வழிகாட்டலைத் தளர்த்தியிருந்த நிலையில், தற்போது நியூஸிலாந்தும் அதன் பயண வழிகாட்டலை

08

நீதித்துறை ஆணைக்குழு கடமைகள்:

# வெள்ளிக்கிழமைகளில் தடை ஏற்படாதிருப்பதை உறுதி செய்க

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

நீதித்துறை மற்றும் நீதித்துறை ஆணைக்குழுவின் கடமைகள் வெள்ளிக்கிழமைகளில் வழமையான முறையில் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

பிரதம நீதியரசர் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் எழுத்து மூலம் இந்த கோரிக்கையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ளது.

08

# தினசரி உணவை குறைத்து வரும் 66 வீத இலங்கையர்

## உலக உணவுத் திட்டம் அதிர்ச்சித் தகவல்

இலங்கையர்களில் 66 சதவீதம் பேர் தினசரி உண்ணும் உணவின் எண்ணிக்கையை குறைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் ஏப்ரல் மாதம் ஒரு கூட்டு விரைவான உணவு பாதுகாப்பு மதிப்பீட்டை நடத்தியது. இது 17 மாவட்டங்களில் உள்ள ஏழ்மையான குடும்பங்களை ஆய்வு செய்தது.

இதன்போது, 86 சதவீதம் பேர் மலிவான உணவுகளையும் குறைவான சத்துள்ள உணவை 95 சதவீதம் பேர் வாங்குவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதேநேரம், 66 சதவீதம் பேர் தினசரி உண்ணும் உணவின் எண்ணிக்கையை குறைத்துள்ளமை இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.85 | 255.31 |
| கனடியன் டொலர் | 272.55 | 285.09 |
| யூரோ | 369.24 | 384.36 |
| ஜப்பான் யென் | 2.6143 | 2.7255 |
| சிங்கப்பூர் டொலர் | 253.84 | 264.59 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 425.35 | 442.62 |
| சுவிஸ் பிராங்க் | 353.52 | 369.35 |
| அமெரிக்க டொலர் | 355.70 | 366.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 954.47 | கட்டார் ரியால் | 98.55 |
| குவைத் டினார் | 1,170.07 | சவூதி ரியால் | 95.91 |
| ஓமான் ரியால் | 934.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 97.97 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 02ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 15

## குறள் தரும் சிந்தனை



பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்

குறையில்லாத சில சொற்களைக் கொண்டு தெளிவான விளக்கம் தந்திட இயலாதவர்கள்தான் பல சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பார்கள்.

# எரிபொருளுக்கான நீண்ட கியூ வரிசை முடிவின்றித் தொடர்வதன் மர்மம்!

இலங்கையில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விநியோகத்தின் நிலைமை கடந்த சில வாரங்களாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் எரிவாயு விநியோக இடங்களிலும் பாவனையாளர்கள் மணித்தியாலயக்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது.

அந்நிய செலாவணி பற்றாக்குறையின் விளைவாக தற்போது நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கின்றது. இவ்வாறான சூழலிலும் எரிபொருள் மற்றும் எரிவாயுவை தட்டுப்பாடு இன்றி மக்களுக்கு தொடராகப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. இதன் நிமித்தம் எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி முன்பை விடவும் அதிகரிக்கப்பட்டு உள்ளதாக தரவுகள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறுவதற்கான காலத்திற்கு முன்னரை விடவும் எரிபொருள் இறக்குமதி தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வரிசைகளில் நீண்ட நேரம் காத்திருப்போரின் எண்ணிக்கை குறைந்ததாக இல்லை. இது கொள்வனவு செய்யப்படும் எரிபொருள் மற்றும் எரிவாயுவின் அளவில் அதிகரிப்பு ஏற்பட்டு இருப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொருளாதார நெருக்கடி நிலவும் தற்போதைய சூழலில் கொள்வனவு செய்யப்படும் எரிபொருளின் அளவில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதற்கான காரணம் யாது? அதன் பின்புலம் என்ன? அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் எரிபொருளுக்கு என்ன நடக்கின்றது? இவ்வாறான கேள்விகளும் எழாமல் இல்லை.

இவ்வாறு எரிபொருளை வழமைக்கு மாறாக அதிகளவில் கொள்வனவு செய்தன் ஊடாக நாட்டில் எரிபொருளுக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? இவ்விதமான முயற்சியின் ஊடாக மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றதா? என்றவாறான கேள்விகளும் மக்கள் மத்தியில் நிலவுகின்றன.

அதேநேரம் எரிபொருளை அதிகளவில் கொள்வனவு செய்து கொள்ளை இலாபம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவை பதுக்கி வைக்கப்படுகின்றனவா? என்ற வினாவும் எழவே செய்கின்றது. இதற்கு நாட்டின் சில பிரதேசங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்ட எரிபொருளும் எரிவாயு சிலிண்டர்களும் காரணமாக அமைந்திருக்கின்றன. அவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டிருந்த எரிபொருளும் எரிவாயு சிலிண்டர்களும் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தமை தெரிந்ததே.

அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் வழமைக்கு மாறாக எரிபொருள் கொள்வனவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. இதன் ஊடாகவே எரிபொருள் கொள்வனவில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புக்கான உண்மையான பின்புலத்தைக் கண்டறியக் கூடியதாக இருக்கும். அதன் மூலம் எரிபொருளுக்குரிய உண்மையான தேவையைக் கொண்டிருப்பவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

அதனால் பொருளாதார நெருக்கடி நிலவும் சூழலில் எரிபொருள் கொள்வனவில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்புக்கான காரணத்தை கண்டறிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியிலும் காணப்படவே செய்கின்றது. அதன் காரணத்தினால் இது தொடர்பில் தேடுதல் நடத்தப்படுவது அவசியம். அதன் ஊடாக எரிபொருளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மோசடிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போது எரிபொருள் கொள்வனவின் ஊடாக முன்னெடுக்கப்படும் மோசடிகளையும் முறைகேடுகளையும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

அதன் பயனாக எரிபொருளை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள நெருக்கடிகள் பலவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். இந்நடவடிக்கைகள் மக்களுக்கு பெரும் நிவாரணமாகவும் நம்பிக்கை அளிக்கும் சேவையாகவும் அமையும். அதனால் எரிபொருள் கொள்வனவில் தற்போது ஏற்பட்டிருக்கும் அதிகரிப்புக்கான உண்மைக் காரணத்தைக் கண்டறிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதே மிகவும் அவசியமானது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் என்பது மக்களின் கருத்தாக உள்ளது. ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து முன்னெடுக்கப்பட வேண்டிய அவசரமானதும் அவசியமானதுமான பணியாகவே இது விளங்குகின்றது.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவை விட்டு நிரந்தரமாக வெளியேற காத்திருக்கும் செல்வந்தர்கள் 8 ஆயிரம் பேர்!

கொரோனா தொற்றுக்கு பின்பு இந்திய பணக்காரர்கள், வர்த்தகக் குடும்பங்கள் எனப் பணபலம் கொண்ட பல தரப்பினர் இந்திய குடியுரிமையை விடுத்து வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறி வருகின்றனர். சிறந்த கல்வி, மேம்படுத்தப்பட்ட மருத்துவச் சேவை, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை, எளிதான வர்த்தகத் தொடர்புகள் எனப் பல காரணம் கூறப்பட்டாலும், இந்திய சந்தையில் உருவான பணம் வெளிநாடுகளுக்குச் செல்வது வருத்தமான செய்தியாகவே உள்ளதாக அங்குள்ள நலன்விரும்பிகள் தெரிவிக்கின்றனர்.



இந்நிலையில் இந்த வருடம் எத்தனை பேர் இந்தியாவை விட்டு வெளியேறப் போகிறார்கள் என ஆய்வறிக்கை வெளியாகியுள்ளது. இந்தியாவில் அடுத்த 10 வருடத்தில் மில்லியனர்கள் மற்றும் பில்லியனர்கள் எண்ணிக்கையில் பெரிய ஏற்றம் இருக்கும் என்று ஆலோசனை நிறுவனமான ஹென்லி & பார்ட்னர்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த மில்லியனர்கள் மற்றும் பில்லியனர்களை இந்தியாவில் தக்க வைப்பது பெரும் சவாலாக இருக்கும் என இந்தியாவை விட்டு வெளியேறி வருவதைச் சுட்டிக்காட்டி ஹென்லி & பார்ட்னர்ஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தரவுகளின்படி இந்த ஆண்டு இந்திய பணக்காரர்களில் சுமார் 8,000 பேர் நாட்டை விட்டு வெளியேற உள்ளனர் என ஹென்லி & பார்ட்னர்ஸ் நிறுவனம் கணித்துள்ளது.

இந்தியாவில் 8000 பணக்காரர்கள் வெளியேற உள்ள நிலையில் ரஷ்யாவில் அதிகபட்சமாக 15,000 பேர் வெளியேறுவார்கள் என்றும், சீனாவின் இதன் எண்ணிக்கை 10,000 ஆக இருக்கும் எனவும் இந்த அறிக்கை கூறுகிறது. பணக்காரர்கள் வெளியேற்றத்தின் அடிப்படையில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவை விட்டு வெளியேறும் பணக்காரர்களை விடவும் புதிய கோடீஸ்வரர்களை உருவாக்கும் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் காரணத்தால் பெரிய அளவில் கவலைப்படத் தேவையில்லை என்று நியூ வேர்ல்ட் வெல்த்தின் ஆராய்ச்சித் தலைவர் ஆண்ட்ரூ அமோயில்ஸ் கூறியுள்ளார்.

### சர்வதேச சிலம்ப மெய்வல்லுனர் போட்டி:

# இலங்கைக்கு நான்கு தங்கப்பதக்கங்களை பெற்றுக் கொடுத்த மட்டக்களப்பு வீரர்கள்

சர்வதேச சிலம்ப சம்மேளத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் மெய்வல்லுனர் போட்டியில் சிலம்பக்கலையின் பேராசான் கணபதிப்பிள்ளையின் மாணவரும், 'அகத்தியம்' பாரம்பரிய கலைச் சங்கத்தின் தலைவரும், சர்வதேச சிலம்ப சம்மேளத்தின் இலங்கைகுரிய தலைவருமான அமரசிங்கம் குமணன் இரண்டு தங்கப்பதக்களையும், அவரது மாணவர்கள் இரண்டு தங்கப்பதக்கங்களையும் வென்று மொத்தமாக இலங்கைக்கு நான்கு தங்கப்பதக்கங்களை பெற்றுக் கொடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

சர்வதேச சிலம்ப சம்மேளத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் சர்வதேச சிலம்ப மெய்வல்லுனர் போட்டியின் 2021 ஆம் ஆண்டிற்குரிய போட்டியானது கனடா நாட்டின் ஏற்பாட்டில் 2021 நவம்பர் 14 முதல் 28 வரை நடைபெற இருந்த போதிலும், உலக நாடுகளின் அசாதாரண நிலைமையால் பிற்போடப்பட்டு 17 டிசம்பர் இணைய வழி மூலம் இடம்பெற்றிருந்தது.





இந்தியா, இலங்கை, கனடா, மலேசியா, சிங்கப்பூர், வட அமெரிக்கா, துபாய் மற்றும் கட்டார் ஆகிய 8 நாடுகளைச் சேர்ந்த சுமார் 400 வீரர்களும், 200 வீராங்கனைகளும், பங்குபற்றியிருந்த இப்போட்டியின் முடிவுகள் அண்மையில் வெளியாகிய நிலையில், மட்டக்களப்பைச் சேர்ந்த சிலம்பக்கலையின் பேராசானான கணபதிப்பிள்ளையின் மாணவரும், அகத்தியம் பாரம்பரிய கலைச் சங்கத்தின் தலைவரும், சர்வதேச சிலம்ப சம்மேளத்தின் இலங்கைகுரிய தலைவருமான அமரசிங்கம் குமணன் குறித்த போட்டியில் சிரேஷ்ட பிரிவில் இரண்டு தங்கப்பதக்கங்களையும், அவரது மாணவர்கள் கனிஷ்ட பிரிவில் இரண்டு தங்கப்பதக்கங்கள், நான்கு வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் ஐந்து வெண்கலப்பதக்கங்களையும் பெற்றிருந்தனர்.

அதேவேளை அமரசிங்கம் குமணன் 2020 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டியிலும் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பேராசான் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை வழங்கி கௌரவித்திருந்தார்.

சிலம்பம் உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டத்திற்கே உரித்தான பாரம்பரியத் தற்காப்புக்கலைகளை வளர்த்தெடுக்கும் நோக்கிலும், இன்றைய சந்ததியினருக்கு இவ்வாறான கலைகளை கையளிக்கும் நோக்கிலும் 'அகத்தியம்' பாரம்பரிய கலைச் சங்கம் முன்னெடுத்து வருகின்ற அனைத்து முயற்சிகளும் பாராட்டுதலுக்குரியவையாகும்.

இதன்போது தங்கப் பதக்கத்தினை கணேசமூர்த்தி லசிந்தா, பரமேஸ்வரன் மதுமிதா ஆகிய இரு மாணவர்களும், வெள்ளிப் பதக்கத்தினை அரவிந்த் சுலாஞ்ஜனி, ரவீந்திரன் மேனுஷா, ராமதாஸ் லஜஹரி, பாலகிருஷ்ணன் துஷயந்தி ஆகிய மாணவர்களும், வெங்கலப் பதக்கத்தினை அகிலன் ஜெனிபர், இராமநாதன் வேதிகாதேவி,

ஜெயரஞ்சன் மிதோஷனா, அந்தோனிப்பிள்ளை அபியுத், பாலகிருஸ்ணன் கபிலாஷினி, முரளி கொன்சிலா, விஜயன் விபுததரன், விஜய்குமார் விவேகா ஆகிய எட்டு மாணவர்களும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**கல்லடி குறூப் நிருபர்...**

# யூனியன் அஷ்யூரன்ஸ் அறிமுகப்படுத்திய Get Fit திருப்புமுனை டிஜிட்டல் தீர்வு

வாடிக்கையாளர்கள் தங்கள் காப்புறுதிகளை தாமே நிர்வகிக்க அதிகாரம் அளிக்கும் காப்புறுதித் துறையின் முதலாவது விரிவான டிஜிட்டல் தீர்வான யூனியன் அஷ்யூரன்ஸின் Click life App, வாடிக்கையாளர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ வழிவகுப்பதன் மூலம் ஒரு படி மேலே செல்கிறது. அற்புதமான fitness அம்சங்களுடன் வரும் இந்த புதுமையான App, வாடிக்கையாளர்கள் சேகரித்த loyalty புள்ளிகளின் அடிப்படையில் அவர்களுக்கு மதிப்புமிக்க வாழ்க்கைத்தர வெகுமதிகளையும் வழங்குகிறது.







ஆப்ஸின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், வாடிக்கையாளர்கள் உடற்பயிற்சி இலக்குகளை நிறைவு செய்வதன் மூலம் கூடுதல் புள்ளிகளையும் அதன் மூலம் அதிக வெகுமதிகளையும் பெற முடியும். செயலியில் உள்ள 'Get Fit' வசதி, ஒருவரின் உடல் செயல்பாடுகளைக் கண்காணிக்க ஒரு Dashboard மற்றும் தினசரி உணவு உட்கொள்ளலைக் கண்காணிக்க மற்றும் கலோரி பதிவு ஆகியவற்றை உள்ளடக்கியது. இது வாடிக்கையாளர்கள் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்கவும் அவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும் உதவும்.

அதிநவீன கலோரி கவுண்டரில் செயற்கை நுண்ணறிவால் இயங்ககூடிய உணவுப் படப்பிடிப்பு மற்றும் உணவுத் தெரிவுக்கான அங்கீகார அமைப்பும் உள்ளது, இது பயனர்கள் தங்கள் உணவின் படங்களை பார்வையிடவும், அவர்களின் கலோரி உட்கொள்ளலைக் கண்காணிக்கவும் உதவுகிறது. பல இலங்கை உணவுகள் உட்பட 900,000 உணவுப் பொருட்களின் தரவுத்தளத்தையும் இது கொண்டுள்ளது.

இந்த முயற்சியின் மூலம், யூனியன் அஷ்யூரன்ஸ், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வெகுமதி அளிக்கும் வகையில் கலோரி எண்ணிக்கை மற்றும் உடல் செயற்பாட்டுக் கண்காணிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் புதுமையான உடற்பயிற்சி தீர்வை அறிமுகப்படுத்தி இந்த தொழில்துறையில் முதன்மையானதாகத் திகழ்கிறது. மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் BMR (Basal Metabolic Rate) சூத்திரங்களில் ஒன்றான MifflinSt Jeor சமன்பாட்டின் அடிப்படையில் எடையைக் குறைக்க அல்லது பராமரிக்க பயனர்கள் ஒரு உடற்பயிற்சி திட்டத்தை உருவாக்கலாம்.

இது தனிப்பயனாக்கப்பட்ட தினசரி கலோரி மற்றும் செயற்பாட்டு நிமிட இலக்கை வழங்குகிறது. அவர்களின் செயலியில் உள்ள நிமிடங்களைச் சரிபார்ப்பதன் மூலம், பயனர்கள் தங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் பொருத்தமான குறிப்பிட்ட செயல்பாடுகள் மற்றும் WHO பரிந்துரைகளின் அடிப்படையில் அவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதைக் கண்காணிக்கவும் முடியும்.

யூனியன் அஷ்யூரன்ஸின் தலைமை வங்கிக் காப்பீட்டு அதிகாரி விந்தியா குரே கூறுகையில், "உடல் பருமனை சமாளிப்பது என்பது இலங்கையர்களுக்கு நீண்ட கால சுகாதார சவால்களில் ஒன்றாகும். இதய நோய், பக்கவாதம், புற்றுநோய், நீரிழிவு மற்றும் நாள்பட்ட நுரையீரல் நோய் போன்ற தொற்றா நோய்கள் நாட்டில் 80% க்கும் அதிகமான இறப்புகளை ஏற்படுத்துகின்றன. எனவே, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ ஊக்குவிப்பதற்காகவும், உடற்பயிற்சி இலக்குகளை நிர்ணயிக்கவும் கிளிக்லைஃப் செயலியில் ஒரு புதிய விடயத்தை சேர்த்துள்ளோம்" என்றார்.

Click life App ஆனது உண்மையான தடையற்ற பண்பாட்டை வழங்குகிறது. செயலியின் உள்ளடக்கங்களைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு Loyalty புள்ளிகளும் வழங்கப்படும். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் வவுச்சர்கள் மூலம் பெற்றுக் கொண்ட புள்ளிகளைச் சேகரித்து பயன்படுத்தலாம். இந்த டிஜிட்டல் வவுச்சர்களை பல்பொருள் அங்காடிகள், மருந்தகங்கள், உணவகங்கள் மற்றும் துணிக்கடைகள் உட்பட 85 இற்கும் மேற்பட்ட கூட்டாளர் வணிக நிலையங்களில் பயன்படுத்த முடியும்.

யூனியன் அஷ்யூரன்ஸின் பிரதம தகவல் அதிகாரி ஹர்ஷ சேனாநாயக்க, "யூனியன் அஷ்யூரன்ஸ் இலங்கையின் ஆயுள் காப்புறுதி துறையில் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதிலும், ஆரோக்கியமாக வாழ்வதிலும் இலகுபடுத்தப்பட்ட டிஜிட்டல் பரிணாம வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்கிறது" என்று கூறினார்.

# கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயற்திறனை விருத்தி செய்யும் செயலமர்வு

கூட்டுறவுத்துறையினூடாக மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்கும் பொருட்டு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயற்திறனை விருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் முன்னெடுத்து வருகிறது.



இதற்கமைவாக, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் வழிகாட்டலின் கீழ் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு துறைகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறித்த உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு We Effect நிறுவனம் முன்வந்துள்ளது.

நிலையான செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழிகாட்டுதல், தரமான உற்பத்திகள் மற்றும் சேவைகள் வழங்குவதனூடாக சமூக பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்தல், உற்பத்தி தொழில் முயற்சிகள் போன்ற நோக்கங்களை அடைதல், கணக்கியலில் வெளிப்படைத்தன்மையை பேணுதல் என்பன இவ்வேலைத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

மேற்படி வேலைத்திட்டத்திற்கமைவாக, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு (Training Program for Developing Skills on the use of Audit standards) பயிற்சி செயலமர்வொன்று அண்மையில் மட்டக்களப்பு சத்துருகொண்டான் சர்வோதயத்தில் இடம்பெற்றது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை ஆகிய நான்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவுகளிலிருந்தும் 45 கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

குறித்த பயிற்சி செயலமர்வில் கணக்காய்வு அத்தியட்சகர் ஏ.எம்.மாஹிர் வளவாளராக கலந்து கொண்டு இலங்கை கணக்காய்வு நியமம் குறித்தும், கணக்காய்வு எதிர்பார்க்கை இடைவெளி தொடர்பாகவும் அதனை எவ்வாறு குறைக்கலாம் என விரிவுரைநிகழ்த்தினார்.

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு சட்டம் தொடர்பான மற்றுமொரு பயிற்சி செயலமர்வையும் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஏ.எல்.றியாஸ்...**
*(பாலமுமனை விசேட நிருபர்)*










பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் கண்டி கட்டுகஸ்தோட்டை சாஹிராக் கல்லூரியில் கணனி தொழில்நுட்ப நிலையம் திறந்து வைத்தல் மற்றும் வறிய குடும்பங்களுக்கு உலருவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது. கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கான உலருணவுப் பொதிகளும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

### கந்தப்பளை ஹைபொரஸ்ட் சிறுமி மரணம்

# தாயாரின் வாக்குமூலத்தில் சந்தேகம்; உடலுறுப்பு இரசாயன பகுப்பாய்வுக்கு

கந்தப்பளை ஹைபொரஸ்ட் இலக்கம் 01 தோட்டத்தின் தனி வீட்டில் சடலமாக மீட்கப்பட்ட எட்டு வயது சிறுமியின் உடல் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோட்ட மயானத்தில் (15) மாலை 02 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வாறு சடலமாக கடந்த (12) காலை 8.45 மணியளவில் மீட்கப்பட்ட சிறுமி ஹைபொரஸ்ட் இலக்கம் (01) தோட்ட பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி கற்கும் காவியா என செல்லமாக அழைக்கப்படும் இராஜமாணிக்கம் விசாந்தினி (வயது 08) என்பவராவார்.

இவ்வாறு உயிரிழந்த எட்டு வயது சிறுமி தனது வீட்டு முற்றத்தில் விளையாடி கொண்டிருந்த நிலையில் கழுத்தில் சீலை இறுகி உயிரிழந்துள்ளார்.

இந்த சிறுமி உயிரிழந்தது தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்த வலப்பனை நீதிமன்ற நீதவான் ஷிரந்த விக்கிரமரத்தின சடலத்தை சட்ட வைத்தியர் ஒருவரால் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஹைபொரஸ்ட் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதையடுத்து சிறுமியின் சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் கடந்த (13) காலை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அன்றைய தினம் மாலை உடல் உறவினருக்கு கையளிக்கப்பட்டது.

சிறுமி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் சந்தேகங்கள் நிலவிய நிலையில் உடல் பகுதிகள் சில இரசாயன பகுப்பாய்வு பகுதிக்கு அனுப்பப்பட்டு அறிக்கையிடுமாறும் சட்ட வைத்தியர் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் சிறுமியின் உடலை எரிக்கக் கூடாது என உத்தரவிடப்பட்டு, பாதுகாப்பான இடத்தில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று பெற்றோருக்கு சான்றிதழ் ஊடாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இரசாயன பகுப்பாய்வு கிடைக்கப்பட்டதன் பின்னர் சிறுமியின் மரணத்தில் சந்தேகம் நிலவும் பட்சத்தில் மீண்டும் உடல் தோண்டியெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் சிறுமியின் உயிரிழப்பு தொடர்பில் சிறுமியின் தாயாரிடம் மேற்கொள்ளப்பட்ட மரண விசாரணை வாக்கு மூலத்தில் சந்தேகங்கள் எழுந்துள்ளதாக மரண விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்

### மலையகத்தில்

# மண்ணெண்ணெய் பாவனை அதிகரித்ததால் நாளாந்தம் வரிசையில் காத்திருக்கும் நிலை

**ஹற்றன் விஷேட நிருபர்**



மண்ணெண்ணெய் என்றுவரும் என்ற ஏக்கத்தில் மலையக மக்கள் நீண்ட வரிசையில் நாளாந்தம் காத்து நிற்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணெயைப் பெறும் நோக்கில், நேற்று (15) அதிகாலை மூன்று மணிமுதல் ஹற்றன் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள எண்ணை நிரப்புநிலையத்தில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

ஹற்றன் பகுதியிலுள்ள மூன்று எண்ணை நிரப்பு நிலையங்களில் மாத்திரமே மண்ணெண்ணெய் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

எனினும் கடந்தவாரம் மண்ணெண்ணெய் பெற்றுக்கொடுக்கப்பட்ட போதிலும்,சகலருக்கும் இதை, விநியோகிக்க முடியாதுபோனது. இந்நிலையில், இவற்றைப்பெறாத மக்களே நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

எப்போது, எண்ணெய் வருமென்ற தகவல் நிலைய உரிமையாளர்களுக்கும் சரியாக தெரியாதுள்ளன. இதனாலே, பொதுமக்கள் இவ்வாறு அடிக்கடி வரிசையில் நின்று ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.

சமையல் எரிவாயு விலை அதிகரிப்பின் காரணமாகவும்,தட்டுப்பாடு காரணமாகவும் அதிகமான மக்கள் மண்ணெண்ணெய் அடுப்பினையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் மலையகப் பகுதியில் மண்ணெண்ணெய் பாவனைகள் அதிகரித்துள்ளன. இதனால்

### தலவாக்கலை சுற்று வட்டத்தில்

# பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் பலி

**தலவாக்கலை குறூப் நிருபர்**



தலவாக்கலை, கொத்மலை வீதியில் நேற்று (15) தனியார் பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் லிந்துலை மெராயா தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நடராஜ் செல்லதுரை வயது (46) என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தலவாக்கலை சுற்று வட்டத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. தலவாக்கலை பஸ் தரிப்பிடத்திலிருந்து பூண்டுலோயா நோக்கி சென்ற தனியார் பேருந்தும் பத்தனை பகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளுமே தலவாக்கலை சுற்று வட்டத்திற்கு முன்பாக நேருக்கு நேர் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தபால் உத்தியோகத்தர் வீட்டில் பெருந்தொகை கடிதங்கள் மீட்பு

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

பொகவந்தலாவை தபால் நிலையத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் வீட்டில் இருந்து ஒரு தொகை கடிதங்கள் மீட்கப்பட்டுள்ளதோடு குறித்த தபால் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கையொன்றை, பொகவந்தலாவை கொட்டியாக்கலை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் உள்ள வீடு ஒன்றில் புகையிலை தூள் இருப்பதாக கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த உத்தியோகத்தரின் வீட்டை சோதனை இட்ட போதே ஒரு தொகை கடிதங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த பண்டார தெரிவித்தார்.

பொகவந்தலாவை கொட்டியாகலை பகுதியில் உள்ள மக்களுக்கு பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் மக்களுக்கு வந்த கடிதங்களே இவ்வாறு மீட்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.


## கேள்வி அறிவித்தல்

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
### சுத்திகரிப்புப் பிரிவு
### சுத்திகரிப்பு இடப்பரப்பின் தோட்டப் பராமரிப்பு

**கேள்விக் குறியீட்டு இல. – PD/SER/04/2022**

12 மாதங்களுக்கு சுத்திகரிப்பு இடப்பரப்பின் தோட்டத்தைப் பராமரிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவை (ரூ. 892.86 + 12% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டின் மென்பிரதி மற்றும் விலைமனுதாரரை தொடர்பு கொள்ளும் விபரங்கள் சகிதம் ref.procurement@ceypetco.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விலைமனுதாரர் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-07-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2400684 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி : 0094-11-5455332**
**தொலைநகல் : 0094-11-5455424**






# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த. (உ.தரப் பரீட்சை – 2021(2022)
## செய்முறைப் பரீட்சை

இப்பரீட்சையின் பின்வரும் பாடங்களுக்கான எழுத்துப் பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

| பாட எண் | பாடம் | செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள திகதிகள் |
|---|---|---|
| 66 | உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | 2022.06.18 தொடக்கம் 2022.06.22 ஆம் திகதி வரை |
| 66 | பொறியியற் தொழில்நுட்பவியல் | 2022.06.29 தொடக்கம் 2022.07.09 ஆம் திகதி வரை |

**செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்தி தோற்ற வேண்டிய இடம், திகதி என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றை எக்காரணத்திற்காகவேனும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.**

மேற்குறித்த பாடத்திற்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தபால் முகவரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக (www.doenets.lk) பதிவிறக்கம் செய்து கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஏதாவது விசாரணைகள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் பின்வரும் தொலைபேசி எண்கள் மூலம் தொடர்பு கொள்ள முடியுமென்பதை கருத்திற் கொள்ளவும்.

**நேரடித் தொலைபேசி எண் : 1911**
**011-2784208, 011-2784537, 0112786616**
**தொலைநகல் இலக்கம் : 011-2784422**
**பொதுத் தொலைபேசி எண் : 011-2786200, 011-2784201, 011-2785202 } நீடிப்பு 263, 265, 280, 282, 433**

**எல்.எம்.டீ. தர்மசேன**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/31/உ தரம் செ.ப/2021**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2022.06.15**




# ஆளுநரின் தலையீட்டால் முடிவுக்கு வந்த அதிபர் இடமாற்றம்

## உரிய வகையில் அமுல்படுத்துமாறு செயலாளருக்கு பணிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ்.மாவட்டத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்காத 27 அதிபர்களின் பணி இடமாற்றம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆளுநரின் தலையீட்டினால் இப்பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், இதுவரைகாலமும் ஆசிரியர் நியமனத்திலும் தற்போதைய அதிபர் நியமனத்திலும் வெளிமாவட்டம் செல்லாத சுமார் 47 அதிபர்கள் யாழ்.மாவட்டத்தில் தங்கியிருப்பதாக யாழ்.கல்வி வலயத்திற்கு வழங்கப்பட்ட தகவல் அறியும் சட்ட மூலத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் முதற்கட்டமாக 27 பேருக்கு வெளிமாவட்டங்களுக்கு பணி இடமாற்றம் வழங்கப்பட்டது. இவ்வாறான நிலையில் 27 பேர் வெளிமாவட்டம் செல்வதைத் தவிர்ப்பதற்காக மேன்முறையீடு செய்தனர். கல்வி அமைச்சின் செயலாளர் சிலர் வெளிமாவட்டம் செல்வதை தடுப்பதற்கு முனைகின்றனர். இதனைக்காரணம் காட்டி ஏனையவர்களும் தமது கடமைகளை பொறுப்பேற்கப் பின்னடித்து வந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து தகுந்த காரணங்கள் சமர்ப்பிக்காத அதிபர்களை உடனடியாக அவர்களுக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளில் கடமைகளை பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்நிலையில் தகுந்த காரணங்கள் சமர்ப்பிக்காத 22 அதிபர்களையும் தமது வெளி மாவட்ட கடமைகளை பொறுப்பேற்குமாறு கல்வி அமைச்சின் செயலாளரினால் எழுத்து மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறியக் கிடைத்தது.

பணி இடமாற்றம் வழங்கப்பட்ட 27 அதிபர்களும் வெளி மாவட்டத்திற்கு செல்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட நிலையில் அவர்களது மேன்முறையீடும் நிராகரிக்கப்பட்ட நிலையில் கடமைக்கு செல்லவில்லை என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் படுகிறது.

இதற்கு பிரதான காரணமாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தனக்கு வேண்டிய இருவரின் அதிபர் இடமாற்றத்தை நிறுத்துவதற்கு முனைந்ததன் விளைவே ஏனைய அதிபர்களும் கடமைகளைப் பொறுப்பேற்க செல்லாமைக்கான காரணம். கல்வி அமைச்சின் செயலாளர் தமக்கு வேண்டியவர்களை காப்பாற்றுவதற்காக முறைமை ஒன்றை தனக்கு வேண்டியவர்களுக்கு தெரிவித்ததாக எமக்கு அறியக் கிடைத்தது.

அதாவது அதிபர் இடமாற்றத்தை வழங்கிய முறையில் அனைவரும் கடமைகளை பொறுப்பேற்கட்டும் ஓரிரு நாட்களின் பின்னர் உங்கள் கோரிக்கையை ஏற்று உங்கள் இடமாற்றத்தை நிறுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

இதனை அறிந்த ஏனைய அதிபர்கள் சுதாகரித்துக்கொண்ட நிலையில் எல்லோரும் சென்றால் தாமும் செல்வோம் என ஒருவரை ஒருவர் காரணம் காட்டி கடமையை பொறுப்பேற்காது பின்னடித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் கோரி கையெழுத்துப் போராட்டம்



**யாழ்.விசேட நிருபர்**

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள் விவசாயத்திற்கான எரிபொருள் தேவையினை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர். அச்சுவேலி சந்தையில் நேற்று புதன்கிழமை காலை கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் விவசாயத்திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

# கால்நடைகள் திருட்டு

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் காட்டுப்பகுதியில் கால்நடைகளை இறைச்சிக்காக கடத்தியுள்ளமை அம்பலமாகியுள்ளதுடன் இச்சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் காட்டுப்பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்டுவரும் கும்பலொன்றினாலேயே இச்சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேவிபுரம் காட்டுப்பகுதியில் நீண்டகாலமாக சட்டவிரோதமான முறையில் மரங்கள் அறுக்கப்பட்டு குற்றிகளாக ஏற்றப்பட்டு வந்துள்ளமை கிராம மக்களால் இனம் காணப்பட்டுள்ளது. கிராம அபிவிருத்தி சங்கம், பொலிஸ் கிராம குழுக்கள் அனைவரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின்போதே சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# மின்சாரம் தடைப்பட்டமையால் பெற்றோல் விநியோகம் தடை



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் இருப்பில் இருந்தும் மின்சாரம் தடைப்பட்டமையால் மூன்று மணித்தியாலயங்கள் தாமதத்தின் பின்னர் எரிபொருள் வழங்கப்பட்டது.

வவுனியாவில் நேற்று(15) காலை அநேக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரம் எரிபொருள் வழங்கப்பட்டு வந்தது. இதனால் பெற்றோலை பெற்று கொள்வதற்காக நீண்ட வரிசையில் பொதுமக்கள் கூடிநின்றனர்.

எனினும் காலை 8.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டமையால் எரிபொருள் நிரப்பும் செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டது. இதனால் வரிசையில் நின்ற பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்தனர்.

எனினும் காலை 11 மணியளவில் மின்சாரம் வந்ததும் மீண்டும் எரிபொருள் நிரப்பும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

# மன்னாரில் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் மீனவர்கள் பாதிப்பு – கடலுணவுகளின் விலையும் அதிகரிப்பு



**(மன்னார் குறூப் நிருபர்)**

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்து பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மண்ணெண்ணெய் இன்மையால் மன்னாரில் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மீன்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. மீன்பிடி நடவடிக்கைக்கு என மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதால் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அதே நேரம் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாகவும் சந்தையில் மீன் விலை அதிகரித்துள்ளது. இதனால் மீனவர்கள் உட்பட மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர். மேலும் அண்மைய நாட்களாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடாமையால் சந்தையில் மீன்களின் வருகையும் குறைந்துள்ளது.

மீன்பிடி இன்மை மற்றும் மீன் வியாபாரம் தொடர்ச்சியாக குறைந்துள்ளமையினால் மீன் சந்தைகளை குத்தகை ரீதியாக பெற்று நடாத்தும் குத்தகைதாரர்கள் வருமானம் இன்றி பாதிப்படைந்துள்ளனர்.

எனவே விரைவில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் போதிய அளவில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டு தருமாறு மீனவர்கள் மற்றும் மீன் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



யாழ்.இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியருமான தமிழருவி சிவகுமாரன், அவரது மேன்மை மிக்க பன்முகப் பணிகளுக்காக 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சொல்லாடல் நிகழ்ச்சியில் இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.

# வீடு உடைத்து தங்கநகைகள் திருட்டு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

கோண்டாவிலில் மருத்துவரின் வீடு உடைத்து தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த ஞாயிறு பிற்பகல் கோண்டாவில் இராசமாணிக்கம் மண்டபத்துக்கு முன்பாகவுள்ள வீட்டில் இடம்பெற்றதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவரின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு வீட்டிலுள்ளவர்கள் நிகழ்வொன்றுக்கு சென்று மாலை 5 மணிக்கு திரும்பிய போது வீடு உடைத்து நகைகள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# விவசாயிகளின் எரிபொருள் தேவையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்

**யாழ்.விசேட நிருபர்**

விவசாயிகளுக்கு அரசாங்கம் உடனடியாக எரிபொருள் விநியோகத்தை சீர்செய்வதுடன் விவசாயத்தினைப் பாதுகாப்பதற்கு சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள் விவசாயத்திற்கான எரிபொருள் தேவையினை வலியுறுத்தி நேற்றைய தினம் புதன்கிழமை காலை அச்சுவேலி சந்தையில் கையெழுத்துப் போராட்டத்தினை ஆரம்பித்தனர். அப்போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், நாடு மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டக்கணிப்பின் பிரகாரம் எதிர்வரும் வாரங்களில் உணவுப்பொருட்கள் கிடைக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் வாழ்கின்றனர்.

அரசாங்கம் உணவுப் பாதுகாப்பினையும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற பொறுப்பினையும் நிறைவேற்ற தவறியுள்ளது என்றார்.

# தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கு திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சி




அனைத்துலக மருத்துவ நல அமைப்புIMHO USA மற்றும் இரட்ணம் பவுண்டேசன் (RATNAM FOUNDATION) அமைப்பினரின் நிதி அனுசரணையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் இயங்கும் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 45 ஆரம்ப மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கான திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சிநெறி யூன் மாதம் 11,12 ஆம் திகதிகளில் முதற்கட்டமாக தென்மராட்சி வலய கணனி வள நிலையத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறி இசுருபாய கல்வி அமைச்சின் ஈ தக்சலாவ மற்றும் வடமராட்சி வலய கணனி வள நிலைய வளவாளர்களினால் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சியின் இரண்டாம் நாளில் அதிபர்களுடன் திறன் பலகை பாவனை பற்றியும் வலய கல்வி அலுவலக மேற்பார்வை நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டு ஆசிரியர்களுக்கான விரலிகளும் பெயர் பலகைகளும் வழங்கப்பட்டன.

இதில் வலயக் கல்வி பணிப்பாளர் கிருபாகரன் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கியிருந்தார்.

இப்பயிற்சி அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் IMHO USA இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் கிருஷ்ணகுமாரினால் நெறிப்படுத்தப்பட்டது. இப்பயிற்சி நெறியின் இரண்டாம் கட்டம் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கமைய மூன்று வாரங்களில் நடைபெறவுள்ளது. தென்மராட்சி கல்வி வலயத்திற்கு வழங்கப்பட 10 பாடசாலைகளுக்கான திறன் பலகை கொள்வனவுக்கான நிதியில் 50% அனைத்துலக தென்மராட்சி அமைப்பினரால் வழங்கப்பட்டிருந்தது.

# நகர்வலம்



# மாத்தறை மாவட்ட வர்த்தக நிலையமொன்றில் திடீர் சுற்றிவளைப்பு; 6000 கிலோ அரிசி மீட்பு

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் கைவரிசை

**(மாத்தறை தினகரன், அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்)**



மாத்தறை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் கம்புருபிடிய நகரில் வர்த்தக நிலையமொன்றில் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டபோது பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 6000 கிலோ அரிசியை கண்டு பிடித்துள்ளனர்.

கம்புருபிடிய வர்த்தக நிலையங்களில் அரிசியை பதுக்கி வைத்து கூடுதலான விலைக்கு விற்பதாக மாத்தறை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளிடம் பொது மக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த வர்த்தக நிலையத்தை (12) திடீர் பரிசோதனை செய்ய முற்பட்டபோது, அங்கு அரிசி ஏதும் இல்லையென்று பணியாளர் ஒருவர் கூறினர். இருந்தபோதிலும், அதனைப் பொருட்படுத்தாது நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவாக கடையினுள் புகுந்து பரிசோதனை மேற்கொண்டபோது பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசியைக் கண்டுபிடித்தனர். பத்து கிலோ மற்றும் ஐம்பது கிலோ பக்கட் பொதிகளாக சுமார் 6000 கிலோ அரிசி கண்டுபிடிக்கப்பட்டது.

மாத்தறை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் வர்த்தக நிலையத்திற்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**அநுராதபுரம் நகரிலும் சுற்றிவளைப்பு;**

அநுராதபுரம் நகரில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது விற்பனை செய்யாது பதுக்கி வைத்திருந்த 1600 கிலோவிற்கும் அதிகமான அரிசியினை நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் சம்பா மற்றும் கீரிசம்பா, சிகப்பு பச்சை அரிசிகள் அடங்குவதுடன் அவற்றில் விற்பனை விலை குறியீட்டு இலக்கம் மற்றும் காலாவதியாகும் திகதிகளும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையென அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அம்பலாந்தோட்டையில்

# நீராடி காணாமல் போன மூவரில் தாயின் சடலம் மீட்பு

**(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)**



அம்பாலாந்தோட்டை வெலிபடன்விலை பிரதேசத்தில் கடலில் நீர் மிதிக்கச் சென்று அலைக்கு அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன தாயின் சடலம், சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கரையொதுங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அம்பலாந்தோட்டை பொலிஸார் (15) தெரிவித்தனர்.

அம்பாலாந்தோட்டை, லுனம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட சந்தியா தர்மசீலி (வயது 55) எனும் தாயே நேற்றுமுன் தினம் மாலை சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். இவர் தனது மகன் மற்றும் மருமகன் ஆகியோருடன் வெலிபடன்விலை விகாரைக்கு வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்பு விகாரைக்கு பின்னால் உள்ள கடலுக்கு சென்று நீர் மிதித்துக் கொண்டிருக்கும் போதே மூவரும் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

மகன் மற்றும் மருமகனின் சடலங்களை தேடி கிரிந்தை மற்றும் தங்காலை கடற்படையினர் பொலிஸார் மற்றும் பொதுமக்களின் உதவியோடு தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




சென்னை மைலாப்பூர் சீரடி சாயி பாபா ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை (13) விசேட மங்கள ஆர்த்தி வைபவம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாயி மந்திர் ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தம்பதிகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு மைலாப்பூர் சீரடி ஆலய தலைமை அறங்காவலர் கே. தங்கராஜ், பொதுச்செயலாளர் ஏ. செல்வராஜ் ஆகியோர் உதயநாயகன் தம்பதிகளை பாராட்டி கௌரவித்தபோது எடுத்த படம்.

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட பல கட்சிகள் தீர்மானம்

## ஐ.தே.க பொதுச் செயலாளர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு பல கட்சிகள் முன்வந்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற விசேட நிகழ்வின் போது அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வதற்கான தீர்மானத்தை வெளிப்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொது ஜன பெரமுனவிற்கு ஆதரவு வழங்கிய சில அரசியல் கட்சிகள் உட்பட மேலும் சில கட்சிகள் அதில் உள்ளடங்குவதாகவும் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இலங்கை மக்கள் தேசிய கட்சி, தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி, முற்போக்கு மக்கள் சேவையாளர் கட்சி, ஸ்ரீடெலோ, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ஐக்கிய காங்கிரஸ் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம், ஐக்கிய இலங்கை முன்னணி, இலங்கை ஐக்கிய சமாதான கட்சி ஆகியனவே இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய நிகழ்வின் போது அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் தம்மோடு பேச்சுவார்த்தை நடத்தி இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

# திக்குவல்லையின் மூத்த பெண்மணி

## 102 வயதில் காலமானார்

இலங்கையில் வாழ்ந்த வயது முதிர்ந்த பெண்களில் ஒருவரான திக்குவல்லை விதான வளவ்வையைச் சேர்ந்த ஹாஜியானி பாலாமினா உம்மா நேற்று முன்தினம் தனது 102 ஆவது வயதில் காலமானார். பத்துப் பிள்ளைகளின் தாயான இவர் கடந்த 2020 ஆம் ஆண்டு தனது 100வது பிறந்தநாளை பிள்ளைகள் மற்றும் பேரன் பேத்திகளுடன் கொண்டாடினார்.

இவருக்கு 50க்கும் மேற்பட்ட பேரன் பேத்திகள், கொள்ளுப் பேரன் பேத்திகளும் உள்ளனர். இவர் 1920.10.15 ஆம் திகதி பிறந்தது குறிப்பிடத்தக்கது. அவரின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று மாலை திக்குவல்லை மஸ்ஜிதுத் தக்வா பள்ளி மையவாடியில் நடைபெற்றது. (பாஹிம்)

# ஜாமியதுல் பாஸிய்யாவில் தலைப்பாகை சூடும் விழா

பேருவளை சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடத்தின் 4வதும், 5வதும் தலைப்பாகை சூடும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை (18) இரவு சீனன்கோட்டை பாஸியா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

கலாபீட தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஸீ.எம். ஹம்ஸா தலைமையில் நடைபெறவுள்ள தலைப்பாகை சூடும் விழாவில் சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், உலமாக்கள், குலபாக்கள், உஸ்தாத்மார்கள், ஸாதாத்மார்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தலைப்பாகை சூடி வைக்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வு இம்முறை 131வது மனாகிபுஷ்ஷாதுலி தமாம் மஜ்லிஸ் நடைபெறவுள்ள தினத்தில் உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்களின் முன்னிலையில் வெகு விமர்சையாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கலாபீட இணைச்செயலாளர் பர்ஸான் முர்ஸி தெரிவித்தார்.

# பஸ்–மோ. சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞன் பலி

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஓயாமடுவ செட்டிகுளம் பிரதான வீதியின் துப்பிட்டியாவ பகுதியில் பஸ் வண்டியொன்றுடன் மோட்டார் சைக்கிளொன்றுடன் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தந்திரிமலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் 14 ஆம் திகதி மாலை தந்திரிமலை பொலிஸ் பிரிவின் துப்பிட்டியாவ பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹிதோகம, மிதுன்கொட பகுதியை வசிப்பிடமாக கொண்ட மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற 17 வயது இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தந்திரிமலை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர.




புத்தளம் நகர சபையின் பொதுசன நூலகப் பிரிவினால் பொசன் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐஸ் கிறீம் தன்சல் வழங்கும் நிகழ்வினை நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

(படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

பாணந்துறை தொட்டவத்தையில்

# இன்று 153ஆவது வருட மனாகிப் மஜ்லிஸ் ஆரம்பம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் 153 ஆவது வருட ஷாதுலியா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப வைபவம் இன்று (16) வியாழக்கிழமை மாலை மஃரிப் தொழுகையின் பின்னர் ஆரம்பமாகவுள்ளது.

பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ரீ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இம்மஜ்லிஸ், தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்த மனாகிப் மஜ்லிஸ் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளதோடு உலமாக்களினால் ஒவ்வொரு தினமும் உபன்னியாசங்கள் நிகழ்த்தப்படவுள்ளன. இன்றைய ஆரம்ப நிகழ்வில் கலீபதுஷ்ஷாதுலி அஸ்ஸெய்யிது மௌலவி அலவி மௌலானா (முர்ஸி) விஷேட பயான் நிகழ்த்துவார். தர்மகர்த்தா எம்.ஏ.எம். ரிஸ்வான் ஹாஜி, பரிபாலன சங்கத் தலைவர் எம்.எம்.எம்.இம்தியாஸ், செயலாளர் ஏ.ஜே.ஏ. பழீல் உள்ளிட்ட நிர்வாகிகள், உலமாக்கள் மற்றும் ஜமாத்தார்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில்

# க.பொ.த சா/த மாணவர்களுக்கு இலவச வகுப்புகள் ஆரம்பம்

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

கம்பஹா மாவட்ட சாதாரண தர மாணவர்களுக்கான இலவச வகுப்புகள் மேற்படி மாவட்டத்தின் ஐக்கிய முஸ்லிம் சங்கத்தின் ஏற்பாட்டில் வத்தளை ஹுணுபிடிய ஸாஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடைபெறவுள்ள மேற்படி வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் விசேட ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.

சங்கத்தின் தலைவர் ஜனாப் எஸ். எச். எம். நௌபர் தலைமையிலும் சங்கத்தின் இணைச் செயலாளர்களான ஏ. ஆர். எம் முஸம்மில் மற்றும் கே . எம் . ஜுமாத் ஆகியோரின் வழிநடாத்தலிலும் நடைபெற்ற மேற்படி ஆரம்ப நிகழ்வில் விசேட பேச்சாளராக அஷ்ஷெய்க் யூ.கே. றமீஸ் உட்பட முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் அல்ஹாஜ் ஏ.எஸ். மொஹம்மத், களனி வலய பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.டீஎம். தௌஸீர், பாடசாலை அதிபர் எம்.எம். இர்ஷாத், முன்னாள் மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் எம்.எம். கபூர், வசந்தம் தொலைக்காட்சி செய்தி பொறுப்பாளர் சித்தீக் ஹனீபா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். மேற்படி நிகழ்ச்சியில் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இவ்வார 'அனுபவம் பேசியதே' நிகழ்வில்

# மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாரூக் பங்கேற்பு




ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில், புதிதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மனம் திறந்து தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் 'அனுபவம் பேசியதே' என்ற சிறப்பு நிகழ்ச்சி கொழும்பு, மருதானை வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர்களுடனான சிநேகபூர்வ சந்திப்பும் கலந்துரையாடலுமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்ச்சியில், சிரேஷ்ட ஊடகவியலாளரின் சுவாரஷ்யமான அனுபவங்களைக் கேட்டுப் பயனடைவதோடு, கேள்வி பதில் நிகழ்விலும் கலந்து கொள்ளலாம்.

மாதமொரு முறை நடாத்தத் திட்டமிட்டுள்ள இந்நிகழ்ச்சியின், முதலாவது விருந்தினராக நாட்டின் மூத்த ஊடகவியலாளர் லத்தீப் பாரூக் தனது தேசிய மற்றும் சர்வதேச ஊடக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பி. இப்திகார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், விரும்பியவர்கள் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர். (எம்.எஸ்.எம். ஸாகிர்)



படம்: பேருவளை விசேட நிருபர்

# பேருவளை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு திட்டம்

பேருவளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இப்பிரதேசத்தில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் டெங்கு ஒழிப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவ் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக பேருவளை மரக்கலாவத்தை, பெருகமலை பகுதியில் உள்ள வீடுகளில் மற்றும் வெற்றுக் காணிகளில் தேங்கியுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களை அகற்றும் பணி நேற்று (15) ஆம் திகதி காலை முன்னெடுக்கப்பட்டது. மக்கொனை பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் ஓமேகாவின் வழிகாட்டலின் கீழ் பேருவளை பிரதேச சபையின் உழவு இயந்திரம் மூலம் இவை எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரயில் கட்டணங்களை...

வரும் எரிபொருள் விலை ரயில்வே திணைக்களத்திற்கு பெரும் சுமையை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை பொதுமக்களுக்கு போதியளவில் போக்குவரத்து சேவைகளை வழங்கும் வகையில் நேற்று முதல் சில ரயில் சேவைகளை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க களனிவெளி ரயில்பாதை மற்றும் ஏனைய பிரதான ரயில் பாதைகளில் புதிதாக ரயில் சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் ரயிலில் பயணிப்போரரின் எண்ணிக்கை 20 வீதத்தால் அதிகரித்துள்ளதாக குறிப்பிடும் அவர், ஆனாலும் ரயில்வே திணைக்களத்தின் வருமானம் எந்த விதத்திலும் அதிகரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## லிற்றோ Gas ஆயிரம்...

1,000 ரூபாவால் அதிகரிக்கப்படலாமென்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அந்த நிறுவனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவிக்கையில்,

நிறுவனமானது தற்போது வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டரொன்றை 2500 ரூபா நட்டத்திலேயே மக்களுக்கு பெற்றுக்கொடுத்து வருகிறது. தாய்லாந்து சியாம் நிறுவனத்திடமிருந்தே சமையல் எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டு வந்தது. தற்போது அந்த நிறுவனத்திடமிருந்து சமையல் எரிவாயு கொள்வனவு செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கொள்வனவு செய்த ஓமான் நிறுவனத்திடமிருந்து சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஓமான் நிறுவனத்துக்கு சியாம் நிறுவனத்தை விட 34 அமெரிக்கன் டொலரை அதிகமாக செலுத்தவேண்டியுள்ளது. இந்த நிலையிலேயே 1,000 ரூபாவால் சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை அதிகரிக்க நேரும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

### மின்சாரம் (திருத்தச்) சட்டமூலத்தில்

# சபாநாயகர் கைச்சாத்திட்டு சான்றுரைப் படுத்தினார்



இலங்கை மின்சார சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (15) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இந்தச் சட்டமூலம் அண்மையில் (09) பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு விலை கோரும் நடைமுறையொன்றில் பங்குபற்றுவதற்கு எவரேனும் இதன் மூலம் அனுமதிக்கப்படுவர். அதற்கமைய 25 மெகாவோட் மின்சாரப் பிறப்பாக்கக் கொள்வனவுக்கு மேலாக மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு பிறப்பாக்கும் உரிமையொன்றை வழங்குவதற்காக விண்ணப்பிப்பதற்கு தடையாகவிருப்பதற்கு ஆளொருவர் மீது விதிக்கப்பட்ட மட்டுப்பாட்டை இல்லாதாக்குவதற்கும் பிறப்பாக்கக் கொள்ளளவின் மீதான ஏதேனும் வரையீடின்றி அதற்காக விண்ணப்பிப்பதற்கும் எவரேனும் ஆளை அனுமதிப்பதும் இதன் ஊடாக இடம்பெறும்.

இதற்கமைய நேற்று (15) முதல் இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டம் 2022ஆம் ஆண்டு 16ஆம் இலக்கச் சட்டமாக இலங்கைச் சட்டக் கட்டமைப்பில் இணைந்து கொள்கிறது.

## இந்திய சுற்றுலா பயணிகளை கவரும்...

ஆண்டில் இலங்கை, சுமார் 800,000 சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இதன் வருமானம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுற்றுலாத்துறையின் பங்குதாரர்களுடன் பிரதமர் அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டக்கூடிய மற்றும் சுமார் 1.5 மில்லியன் உயர்மட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான நீண்டகாலத் திட்டங்களை வகுக்குமாறு அனைத்து பங்குதாரர்களையும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

விருந்தோம்பல் துறையில் பல ஊழியர்கள் தொழிலை கைவிட்டதாலும், ஹோட்டல் பாடசாலைகளில் சேர்வதும் வெகுவாக குறைந்துள்ளதாலும் இளைஞர்களை விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துமாறும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு பிரதமர் அறிவுறுத்தினார். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் கலாசாரத்தில் தங்களை மூழ்கடிக்கவும் வாய்ப்பளிக்கும் கலாசார விழாக்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் பிரதமர் கலந்துரையாடினார்.

உலகெங்கிலும் உள்ள அதிகமான எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களை ஈர்க்கும் வகையில் காலி இலக்கிய விழாவை மேம்படுத்துவதற்கான பணிகளை செயற்படுத்துமாறு பிரதமர் அரச சுற்றுலா அதிகாரிகளை வலியுறுத்தினார்.

## சமையல் எரிவாயுவை கொள்வனவு...

தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். லிற்றோ கேஸ் நிறுவனத்தின் புதிய தலைவராக முதித்த பீரிஸ் தமது கடமைகளை நேற்றைய தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். ஏற்கனவே அந்த பதவியை வகித்த விஜித ஹேரத் தமது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அந்த வெற்றிடத்திற்கே முதித்த பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் அந்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக அவர் கடமை புரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பதவியை பொறுப்பேற்றதையடுத்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்: நேற்று முன்தினம் கப்பலிலிருந்து இறக்கப்பட்டுள்ள 3900 மெற்றிக்தொன் சமையல் எரிவாயு தவிர்ந்த வேறு கொள்வனவுக்கான எந்த நடவடிக்கைகளையும் முன்னாள் தலைவர் மேற்கொண்டிருக்கவில்லை. முன்னாள் பணிப்பாளர் சபை அது தொடர்பான தமது பொறுப்பை தவற விட்டுள்ளது.

3900 மெட்ரிக் தொன் எரிவாயு என்பது சிறு அளவானதே. நாட்டில் தற்போது நிலவும் பாரிய சமையல் எரிவாயு நெருக்கடிக்கு அது எந்தவிதத்திலும் போதாது. அதனை வைத்துக்கொண்டு தற்போதைய நெருக்கடி நிலையை சீர் செய்ய முடியாது, என சுட்டிக்காட்டினார், மேலும் ஒரு லட்சம் மெற்றிக்தொன் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 21 ஆவது திருத்தத்துக்கு முன் மக்களது...

பொதுஜன பெரமுன அதற்கு ஆதரவளிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தமது கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போதே முன்னாள் பிரதமர் இவ்வாறு கூறியதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தை பலப்படுத்தும் திருத்தத்தை ஆதரிப்பதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு பிரச்சினை இல்லை எனவும் ஆனால் நிறைவேற்று அதிகாரத்தை, அதிகாரம் இல்லாத பிரதமருக்கு வழங்குவதை தமது கட்சி நிச்சயமாக எதிர்ப்பதாகவும் காரியவசம் மேலும் தெரிவித்தார்.

## CEB முன்னாள் தலைவர்...

எம்.சீ.சீ. பெர்டினாண்டோ தொடர்பாக கோப்குழு அடுத்தவாரம் தீர்மானம் எடுக்கும் என கோப்குழுவின் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபையின் முன்னாள் தலைவர் எம்.சி.சி. பெர்டினாண்டோ கடந்தவாரம் கோப்குழுவில் ஜனாதிபதி தொடர்பில் தெரிவித்திருந்த சர்ச்சைக்குரிய கருத்தை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கை மின்சாரசபையின் செயலாற்றுகை தொடர்பாக அறிவதற்காக அதன் அதிகாரிகள் கோப்குழுவுக்கு கடந்த வாரம் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது மின்சாரசபையின் தலைவர் எம்.சி.சி. பெர்டினாண்டோ, இந்திய பிரதமர் ஜனாதிபதிக்கு தெரிவித்திருக்கும் அறிவிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்த விடயங்கள் ஊடகங்களில் பிரசாரமாகிய பின்னர் ஜனாதிபதி அதனை நிராகரித்திருந்தார். அதன் பின்னர் எம்.சி.சி. பெர்டினாண்டோவும் தான் தெரிவித்திருந்த கருத்தை வாபஸ் பெற்றுக்கொள்வதாக தெரிவித்திருந்தார்.

அதுதொடர்பில் அனுப்பி இருந்த கடிதம் நேற்று எனக்கு கிடைத்தது. எனவே அவர் தொடர்பில் அடுத்த வாரம் கோப்குழு கூடி தீர்மானம் எடுப்போம் என்றார். மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள காற்றாலை மின் திட்டத்தை அதானி நிறுவனத்துக்கு கையளிக்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அழுத்தம் பிரயோகித்ததாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தன்னிடம் கூறினார் என்ற சர்ச்சைக்குரிய கருத்தை இலங்கை மின்சாரசபையின் முன்னாள் தலைவர் எம்.சி.சி. பெர்டினாண்டோ கோப்குழுவில் தெரிவித்திருந்தார்.

## SLPP எந்தவொரு கட்சியுடனும்...

இணைவதற்கு எந்தவித தீர்மானமும் கிடையாதென அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமது கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் வெற்றிகரமாக தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வேறுகட்சியுடன் இணைவதற்கு யோசிக்கும் வகையில் மூளைக் கோளாறு எதுவும் தமது கட்சியினருக்கு கிடையாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமது கட்சியினர் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தவித அவசியமும் கிடையாது. அத்தகைய மூளைக்கோளாறு எதுவும் இல்லை.

பொதுஜன பெரமுன மற்றும் அதனோடு இணைந்த சில கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்துள்ளதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் அதுதொடர்பில் நான் அறியவில்லை. பெரும்பான்மை பலமுள்ள கட்சியொன்றை விடுத்து அதிகாரமற்ற கட்சியொன்றுடன் ஒருபோதும் இணையப்போவதில்லை, என தெரிவித்தார்.

## ஆழ்துளை கிணற்றில்...

மீட்கப்பட்டான். ஜான்கிர் சம்பா மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டின் பின்புறம் உள்ள பாழடைந்த ஆழ்துளைக் கிணற்றில் சிறுவன் ராகுல் ஷாகு தவறி விழுந்தான். 60 அடி ஆழத்தில் சிக்கியிருந்த சிறுவனை மீட்கும் முயற்சியில் இந்திய இராணுவம், தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டது. 105 மணி நேர போராட்டத்துக்கு பின் சிறுவன் ராகுல் ஷாகு பத்திரமாக மீட்டகப்பட்டான். ராகுல் ஷாகு நல்ல நிலையில் இருப்பதாகவும், அவசர சிகிச்சைப் பிரிவில் விசேட கண்காணிப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா 120 மில். டொலரை...

கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் 'சர்வதேச அபிவிருத்திக்கான நிதி கோப்பரேஷன்' மூலம் மேற்படி 120 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்கவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் குறிப்பிடுகையில்:

கடந்த 20 வருடங்களாக வெளிநாட்டுக் கடன், கடன் மற்றும் வர்த்தக வாய்ப்புகள் மூலம் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இலங்கை மக்களுக்கும் அமெரிக்கா தொடர்ந்தும் உதவி வருகின்றது.

தற்போது வழங்கப்படும் 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நடவடிக்கைகளுக்கு பெரும் வாய்ப்பாக அமைவதுடன் அதன்மூலம் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கும் சிறந்த வாய்ப்பாக அமையும்.

100 மில்லியன் அமெரிக்க டொலர் கொமர்ஷல் வங்கிக்கு நேரடியான கடனாகவும் மேலும் 20 மில்லியன் டொலர் தனியார் நிறுவனங்கள் இரண்டிற்கும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த நிதியை உபயோகித்து நாட்டின் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு வங்கிகளுக்கு வாய்ப்பாக அமையும்.குறிப்பாக பெண் தொழில் முயற்சியாளர்களை முன்னேற்றுவதற்கு இது வழியமைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## மாவட்ட, பிரதேச மட்டத்தில்...

விவசாயம், உணவுப் பாதுகாப்பு, பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக்க புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல், மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் அனைத்து அரச சேவைகளையும் பரவலாக்கல் மற்றும் அரச செலவினத்தை முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் நேற்று (15) முற்பகல் கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உலகின் பல நாடுகள் உணவுப் பாதுகாப்பில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. இந்நாட்டின் அறுவடை விநியோகத்தின்போது, சுமார் 40% சதவீதம் அழிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கடுமையான அவதானம் செலுத்துவதன் மூலம் பாரியளவிலான உணவுப் பொருட்களை பாதுகாக்க முடியும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அறுவடையை விநியோகிப்பதில் இடைத்தரகர்களின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் விவசாயிக்கும் நுகர்வோருக்கும் நியாயமான விலையை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

அரசுக்கு சொந்தமான, பயிரிடப்படாத நிலங்களைக் கண்டறிந்து, பயிர்ச்செய்கையில் ஆர்வமுள்ள இளைஞர்களிடம் விரைவில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முப்படைகள், சிவில் பாதுகாப்புப் படை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களமும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராக உள்ளன. அந்த நிறுவனங்களையும் விவசாயத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் வெற்றிகரமான பிரதிபலன்களை அடைய முடியும்.

பயிர்ச்செய்கை புரட்சிக்கு இணையாக புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திப் புரட்சியின் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. சூரியசக்தி மின் உற்பத்தியில் கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதைய மின்சார நெருக்கடியை விரைவாக நிவர்த்தி செய்வதற்கு நிறுவன ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

ஆளுநர்கள், ஜனாதிபதியின் செயலாளர், பொது நிர்வாகம் மற்றும் விவசாய அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் என பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ஸ்ரீலங்கன் விமானியின் சாதுரியத்தால்...

ஒன்று 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தது.

துருக்கி வான்வெளியில் 33,000 அடியில் இருந்து 35,000 அடி உயரத்திற்கு பயணிக்குமாறு துருக்கி அங்காரா விமானக் கட்டுப்பாடு அறையில் இருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானிக்கு அறிவுறுத்தப்பட்டது.

விழிப்புடன் இருந்த ஸ்ரீலங்கன் விமானி, பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானமொன்று 35,000 அடி உயரத்தில் தமது விமானத்திலிருந்து 15 மைல் தொலைவில் பயணிப்பதை கண்டறிந்து, அங்காராவில் உள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் வழங்கினார்.

யு.எல் 504 விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் லண்டனின் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கிச் குறித்த பிரிட்டிஷ் ஏர்வேய்ஸ் விமானம் புறப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஸ்ரீலங்கன் விமானி வழங்கிய தகவலை சரிபார்த்த போது, அங்காரா விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறை, யு.எல் விமானியிடம் 35,000 அடி உயரத்தில் எந்த விமானத்தையும் தாங்கள் ரேடாரில் கண்டறியவில்லை என்று தெரிவித்ததுடன், ஸ்ரீலங்கன் விமானம் மேல் நோக்கி பயணிக்க பணிக்கப்பட்டது.

எனினும், பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தை தமது விமானத்தின் ரேடாரில் கண்டறிந்த ஸ்ரீலங்கன் விமானி, மீண்டும் அங்காரா விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பிரிவினருக்கு தகவல் கொடுத்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் விமானத்தை ரேடாரில் கண்டறிந்த கட்டுப்பாட்டு பிரிவு, ஸ்ரீலங்கன் விமானத்தை மேலே பயணிக்க வேண்டாம் என்று அவசரமாக பணித்தது.

ஸ்ரீலங்கன் விமானம் பணிக்கப்பட்ட உயரத்தில் பயணித்திருந்தால், பிரிட்டிஷ் ஏர்வேய்ஸ் விமானத்துடன் மோதி பாரிய அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யு.எல் 504 விமானத்தில் இருந்த 275 பயணிகள், அதன் பணியாளர்கள் மற்றும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் அதன் பணியாளர்களின் உயிர்கள், யு.எல் விமானத்தின் தலைமை விமானியின் விழிப்புணர்வு மற்றும் சாமர்த்தியமான தீர்மானத்தின் காரணமாக காப்பாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ், UL 504 விமான மற்றொரு விமானத்துடன் மோதும் அபாயத்தை ஏற்படுத்தவில்லை என்பதை தாம் வலியுறுத்த விரும்புவதாக தெரிவித்துள்ளது.

அத்துடன், தமது விமானிகளின் புத்திசாலித்தனமும், விமானத்தின் அதிநவீன தகவல் தொடர்பு அமைப்பும் விமானம் பாதுகாப்பாக பறக்க உதவியது என்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

## சாவகச்சேரி... (03ஆம் பக்கத் தொடர்)

நாட்டில் பரவலாக அனைத்து தரப்பினரும் எதிர்நோக்கும் எரிபொருள் தட்டுப்பாடு இதற்கு பிரதான காரணம் என சுட்டிக்காட்டிய அவர் ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும் மருத்துவ சேவையை வழங்கி வருவதாகவும் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் தயாளினி தெரிவித்தார்.

## விவசாய குடும்பங்களுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் விவசாய சமூகம் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து அவர்களை இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. அத்திட்டத்தை எதிர்வரும் பெரும்போகம் முதல் நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## 90 வீதமான தனியார்... (03ஆம் பக்கத் தொடர்)

நிலையிலும் போதியளவு எரிபொருள் கிடைக்கவில்லையென தெரிவித்துள்ள அவர், இந்தநிலை நீடித்தால் தனியார் பஸ் சேவையை முற்றாக முடக்க நேரிடலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மருந்துகளை கொள்வனவு... (03ஆம் பக்கத் தொடர்)

வழங்குவதற்கு வெளித் தரப்பினரை நாடவேண்டியுள்ளது.

நகர மற்றும் கிராமம் என்ற வித்தியாசமின்றி, அனைத்து வைத்தியசாலைகளிலும் இந்த நிலைமை காணப்படுகிறது. பெருமளவான கிராமப்புற வைத்தியசாலைகளில் சாதாரண சேலைன்களின் கையிருப்பு முடிவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## சனத் நிஷாந்த MP... (03ஆம் பக்கத் தொடர்)

அலரி மாளிகைக்கு முன்பாக இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் குறித்த மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. அதற்கமைய, இரு சரீர மற்றும் தலா 10 மில்லியன் ரூபா ரொக்கப் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## பயணத் தடையை... (03ஆம் பக்கத் தொடர்)

தளத்தியிருக்கின்றது. அதன்படி மீளத்திருத்தப்பட்ட பயண வழிகாட்டலில் கூறப்பட்டிருப்பதாவது:

அண்மைக்காலங்களில் இலங்கையின் பொருளாதார நிலைவரம் மிக மோசமடைந்து வருவதுடன், இது உணவு, எரிபொருள் உள்ளிட்ட சில அத்தியாவசியப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வழிவகுத்தது. பல்பொருள் அங்காடிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் போன்றவற்றுக்கு முன்னால் மக்கள் நீண்டநேரம் வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலையையும் தோற்றுவித்துள்ளது. எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக நாடளாவிய ரீதியில் புகையிரதம், பேருந்து மற்றும் கார் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த போக்குவரத்துச் சேவையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இன்னமும் நீண்டநேர மின்வெட்டு தொடர்கின்றது.

மேலும் இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியுடன் தொடர்புடைய கவனயீர்ப்புப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், அரசியல் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதனுடன் தொடர்புடைய வகையில் நாட்டில் குறிப்பிடத்தக்களவிலான வன்முறைச்சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையில், அவை உயிரழப்புக்கள் மற்றும் சொத்துக்களுக்கான சேதம் என்பவற்றுக்கு வழிவகுத்தன. எனவே இலங்கையிலுள்ள நியூஸிலாந்து பிரஜைகள் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் மற்றும் பெருமளவானோர் ஒன்றுகூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். ஊரடங்குச்சட்ட உத்தரவு உள்ளடங்கலாக இலங்கை அதிகாரிகளால் வெளியிடப்படும் அறிவித்தல்களைப் பின்பற்றும் அதேவேளை, உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடக செய்திகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்று அப்பயண வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெள்ளிக்கிழமைகளில் ... (03ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து நிறுவனங்களுக்கும் வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் மற்றும் அதன் செயலாளர் இசுரு பாலபடபெந்தி ஆகியோர் கடிதம் மூலம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

## மருந்து தட்டுப்பாட்டுக்கு...

தேவையான நிதி கிடைத்துள்ளதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியமான 14 மருந்து வகைகள் தேவையான அளவு கையிருப்பிலுள்ளது. அத்தோடு 186 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அவற்றை விரைவில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அடுத்துவரும் நாட்களில்...

நீடிக்கும் என பெற்றோலிய கூட்டுத்தாபன உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் சுமார் 350 மெட்ரிக் தொன் பெற்றோல் மற்றும் 800 மெட்ரிக் தொன் டீசல் உற்பத்தி செய்யப்படுகிறது. எனினும், அந்த அளவுகள் அன்றாட தேவைகளுக்கு போதுமானதாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, நேற்றைய தினமும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக கொழும்பின் பல பகுதிகளிலும் நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் ஆங்காங்கே வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்தனர்.

## இழுவைப் படகுகளை...

எஸ்.ஜெய்சங்கருக்கும் கோரிக்கைக் கடிதம் ஒன்றை கையளிக்க வடக்கு கடற்றொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அ.அன்னராசா இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

# அறிவித்தல்

**இலங்கை புகையிரத சேவை ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**540, காலி வீதி இரத்மலானை**

**(1965ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது)**

மேற்படி சங்கத்தின் 46ஆம் இலக்க மகா சபையின் ஆண்டு நிறைவு மற்றும் 47ம் உத்தியோகத்தர் தெரிவு 2022.07.24 ஞாயிற்றுக்கிழமையன்று மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை புகையிரத தலைமையக இலக்கிய மற்றும் சமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் சங்கத்தின் தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகள் மற்றும் நிறைவேற்று அங்கத்தவர்கள் 17 பேர் சட்ட பூர்வமாக தேர்ந்தெடுக்கப்படுவதுடன் அதற்கான முன்மொழிவுகளை 2022.06.30 அன்று பி.ப. 12.30 இற்கு முன்னர் சங்கத்தின் செயலாளர்/ பொருளாளரிடம் ஒப்படைப்பதற்கு அல்லது பதிவுத்தபாலில் அனுப்புவதற்கு நடவடிககை மேற்கொள்ளல் வேண்டும்.

பெயர் முன்மொழிவுகள் அடக்கப்படும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'பெயர் மெழிவுகள் 2022, எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

உத்தியோகத்தர் தெரிவுக்காக வாக்கெடுப்பு நடாத்தப்பட ஏதுவாகுமெனின் அதற்காக உங்கள் தேசிய அடையாள அட்டை அல்லது திணைக்கள அறிமுக அட்டையைக் கொண்டுவரவும்.

**கே. திலிப் பிரியன்லால் (தலைவர்),**
**0112 634175**
2022.06.16

**எம். என். குரே,**
**(செயலாளர்/பொருளாளர்)**

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-69

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் இந்தியாவின் உற்பத்தியாளர்கள் (இந்திய கிரடிட் லைன் நிறுவனத்தினால் நிதியளிக்கப்படுவதினால்) அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**CTP Violet Plates**

| Items | Size (mm) | Thickness (mm) | Quantity |
|---|---|---|---|
| S/M74 Plate | 605x745 | 0.30 | 2000 Nos |
| SORD Plate | 715x915 | 0.30 | 1000 Nos |
| S/M 102 Plate | 770x1030 | 0.30 | 500 Nos |

**Chemicals**

| Items | Quantity |
|---|---|
| Plate Developer | 300 Ltrs. |
| Plate Replenisher | 500 Ltrs. |
| Plate Gum | 100 Ltrs. |

**Bid Reference No. S.I 2022/15**
**Non Refundable bid Fee : Rs. 3,000.00**

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2022.07.07ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்துடன், அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ் காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை உரிய விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கடமை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொருட்கொள்வனவு குழுத் தலைவர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**
**2022/06/13**

# பகிரங்க அறிவித்தல்

## பெயர் மாற்றம்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8ஆவது பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய, கொனய்சன்ஸ் ஹொட்டெல் மெனேஜ்மென்ட் (பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை ஹேலீஸ் ஹொட்டெல் மெனேஜ்மென்ட் சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடீ என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பதை 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவுக்கேற்ப இத்தால் அறிவிக்கின்றோம்.

| | |
|---|---|
| முன்னைய கம்பனியின் பெயர் | : கொனய்சன்ஸ் ஹொட்டெல் மெனேஜ்மென்ட் (பிரைவட்) லிமிட்டட் |
| கம்பனி இலக்கம் | : **PV** 22118 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : மாடி 27, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01. |
| **புதிய கம்பனியின் பெயர்** | : **ஹேலீஸ் ஹொட்டெல் மெனேஜ்மென்ட் சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடீ** |

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2022 ஜுன் 16

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட்
செயலாளர்கள்

திகதி 14.06.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4786
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,740,740.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 5 4 5 2 9 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,631,523.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1264
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 829,100.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 9 2 9 7 6 2
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,834,102.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3028
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,726,500.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 16 20 28 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,277,371.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 816
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 852,860.00
வெற்றி இலக்கினம் F வெற்றி இலக்கங்கள் 03 07 41 42
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,498,356.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0095
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,554,120.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 07 36 40 55
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,507,547.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1134
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,419,200.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 256,425,774.00
A 03 36 45 57 59
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# விலைமனு அழைத்தல்

## பெறுகை அறிவித்தல்

## காலத்தை நீடிப்புச் செய்தல்

**சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி நன்னடத்தை, மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் அமைச்சு**

**மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கண்டி**

2022.05.27 அன்று தினமின, டெயிலி நியூஸ், தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

2021.06.06 அன்று இவ்வலுவலகத்தில் நடைபெற்ற பெறுகை முன்னோடிக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட வேண்டுகோலின் பிரகாரம், 2022ஆம் ஆண்டிற்கான மருத்துவமல்லாத உபகரணங்களின் கொள்வனவுக்காக உருப்படி 09 மற்றும் 10 இன் கீழ் (Generator 7 KVA, 10 KVA) விலைமனுப்படிவங்களை வழங்கல் 2022.07.04 அன்று பி.ப. 3.00 வரையும், முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் 2022.07.05 அன்று பி.ப. 02.00 வரையும், சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் திறக்கப்படல் இவ்வலுவலகக் கேட்போர் கூடத்தில் 2022.07.05 அன்று பி.ப. 02.00 இற்கு வரையும் திருத்தப்படுகின்றதென அறிவிக்கப்படுகின்றது. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய உருப்படிகளில் மாற்றமில்லை (தொ.பே. இல: 081-2232456).

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.**
**கண்டி. (RDHS)**

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-63

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் இந்தியாவின் உற்பத்தியாளர்கள் (இந்திய கிரடிட் லைன் நிறுவனத்தினால் நிதியளிக்கப்படுவதினால்) மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**CTP Thermal Plates**

| Items | Size (mm) | Thickness (mm) | Quantity |
|---|---|---|---|
| Komori Plate | 605x760 | 0.30 | 4000 Nos |
| S/M 74 Plate | 605x745 | 0.30 | 6000 Nos |
| SORD Plate | 715x915 | 0.30 | 1000 Nos |
| S/M 102 Plate | 770x1030 | 0.30 | 500 Nos |
| KORD Plate | 550x650 | 0.30 | 1000 Nos |

**Chemicals**

| Items | Quantity |
|---|---|
| Plate Developer | 500 Ltrs. |
| Plate Replenisher | 800 Ltrs. |
| Plate Gum | 500 Ltrs. |

**Bid Reference No. SI 2022/05**

**None Refundable Bid Fee - Rs. 5,000.00**

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2022.07.07ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்துடன், அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ் காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை உரிய விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கடமைநாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொருட் கொள்வனவு குழுத் தலைவர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**
**2022.06.13**

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/077** வாடகைக்கு கட்டிடம் - நகர மின் பாவனையாளர் சேவை நிலையம் - திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 29.06.2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், (திருகோணமலை) 026 222 0060 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம்,திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/22/078** வாடகைக்கு டபிள்கப் மின் அத்தியட்சகர் (திட்டமிடல்) பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருட காலம்) | 29.06.2022 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத்திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்தி வரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# பெறுகை அறிவித்தல்

## உள்ளூர் அபிவிருத்தி மேம்பாட்டுத்திட்டம்
## உள்ளூராட்சி மன்றங்களின் செயற்திறன் பரிமாற்றம்-1 (PT1) திறனை வலுப்படுத்தல் வேலைத்திட்டம்
## மாந்தை கிழக்கு பிரதேச சபை

01. தலைவர் உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, மாந்தை கிழக்கு பிரதேசசபை, வடமாகாணம் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருள் கொள்வனவுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. ஆர்வமுள்ள வழங்குநர்கள் (Suppliers) தலைவர்/செயலாளர் மாந்தை கிழக்கு பிரதேசசபை, (தொலைபேசி: 021 228 3475, fax No: 021 228 3476 மின்னஞ்சல்: manthaieastps@yahoo.com) இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 16.06.2022 இலிருந்து 13.07.2022 வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. தேவையான தகுதிகளில் குறிப்பிட்ட பொருள் வகை மற்றும் துறையில் தீவு முழுவதும் பராமரிப்பு, விநியோகம், பொருத்துதல் மற்றும் விற்பனையில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் உள்ளடங்கும். மேலதிக விபரங்கள் கேள்வி ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர் மாந்தை கிழக்கு பிரதேசசபை எனும் முகவரியில் 16.06.2022 திகதியிலிருந்து 13.07.2022ந் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (அனைத்து வரிகளும் உள்ளடங்க) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் (Original and duplicate) சமர்ப்பிக்கப்பட வேண்டும். Original மற்றும் Duplicate பிரதிகள் தனித்தனியாக சீல் செய்யப்பட்ட உறைகளில் முறையே Original மற்றும் Duplicate என்று குறிப்பிடப்பட வேண்டும். இரண்டு உறைகளும் உறையின் மேல் இடது மூலையில் ''கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி இல'' குறிப்பிடப்பட வேண்டும். பூரணமாக நிரப்பப்பட்ட கேள்வி ஆவணம் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ தலைவர்/செயலாளர் மாந்தை கிழக்கு பிரதேசசபை எனும் முகவரிக்கு 14.07.2022 ஆம் திகதி மாலை 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இலத்திரனியல் மூலம் அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்துதொன்பது - 01.09.2022) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.


| இல | கேள்வி எண் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | கொள்வனவுக்கான மதிப்பிட்டுத் தொகை (மீல். ரூபா) | திறக்கும் திகதியில் இருந்து கேள்வியின் செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 02 | NP/14/44(2) /02/ PT1/2022 | சிறுவர் பூங்காக்களுக்கான விளையாட்டு உபகரணம் கொள்வனவும் பொருத்துதலும் | 45 நாட்கள் | 1.91 | 01.09.2022 | 30,000.00 | 29.09.2022 |


09. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 30.06.2022ந் திகதி மு.ப. 11.00 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் வந்து பங்குபற்றலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**மாந்தை கிழக்கு பிரதேசசபை**
**வடமாகாணம்.**

**16.06.2022**

## சிறு விளம்பரம்






321

**வெற்றிடங்கள்**

**தோட்டத்துறை**

தோட்ட வேலை, தேயிலை கொ முந்து பறித்தல் மற்றும் தோட்ட வேலைகளிற்கு குடு ம்பமொன்று மற்றும் இரண்டு கங்காணிகள் தேவை. நீர், மின்சாரம் உண்டு. அனு பவ த்தின் அடிப்படையில் சம்ப ளம். அழைக்க வு ம் 0773436200. 036525

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் மற்றும் நேரசூசி விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

| இல. | பரீட்சை | பரீட்சை நடைபெறும் திகதிகள் | பரீட்சை நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | நாட்டின் தேசிய பாடசாலைகளில் வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்காக இலங்கை ஆசிரிய சேவையின் 3-1 (அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2021 (2022) | 2022 ஜுன் மாதம் 18 | கொழும்பு |
| 02 | இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (பகுதி I) - 2020 (2022) | 2022 ஜுன் மாதம் 19 | கொழும்பு |

அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் இத்திணைக்களத்தின் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை www.doenets.lk இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி :- 011-2785230 / 011-2786150
தொலைநகல் :- 011-2784232

**எல்.எம்.டி. தர்மசேன**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

**5/5/2/AD/2021**
**நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**
**2022 ஜுன் மாதம் 16 ஆம் திகதி**

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# விலைமனுக்கோரல்

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தொழிநுட்ப பிரிவில் ஃபயர்வால் (FIREWALL) பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் உரிமங்களை புதுப்பித்தல்**

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் தொழிநுட்ப பிரிவிற்கான ஃபயர்வால் (FIREWALL) பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் உரிமங்களை புதுப்பித்தல் சேவையினை வழங்குவதற்கு தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000.00** கட்டணத்தினை செலுத்தி **2022.07.04** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2022.07.05 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"TRCSL தொழிநுட்ப பிரிவிற்கு ஃபயர்வால் (FIREWALL) பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் உரிமங்களை புதுப்பித்தல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**தலைவர்,**
**சிரேஷ்ட கொள்முதல் குழு,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 8.**

# பொதுமக்கள் அறிவித்தல்

## 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 2022 மே மாதம் 15 ஆம் திகதி வரை பதிவாகியுள்ள வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் படிமுறைகளை தீர்மானிப்பதற்கான விசாரணை ஆணைக்குழு

1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு (திருத்தப்பட்ட) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2022 ஜுன் மாதம் 06 ஆம் திகதி 2283/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் கீழ்க்காணும் அங்கத்தவர்களுடன் கூடிய மேற்போந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

01. சனாதிபதி சட்டத்தரணி மாண்புமிகு புவனெக பண்டுகாபய அலுவிஹாரே அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதி (தலைவர்)
02. திரு. சேனாதிபதி முதியன்சேலாகே விக்கிரமசிங்க முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (உறுப்பினர்)
03. திரு. நாணாயக்கார அப்பரெக்ககே சுஜீவ வசந்த குமார மேலதிக பிரதான மதிப்பீட்டாளர் (உறுப்பினர்)

2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி முதல் 2022 மே மாதம் 15 ஆந் திகதி வரையிலான கால எல்லைக்குள் நாட்டின் சில பிரதேசங்களில் இடம்பெற்ற தீவைப்பு உள்ளிட்ட சகல விதத்திலுமான நாசகாரச் செயல்கள், கொள்ளையடித்தல் மற்றும் களவுகள் காரணமாக தமது சொத்துக்கள் மற்றும் உயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு அல்லது அழுத்தத்துக்குள்ளான ஆட்கள், நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் சங்கங்களுக்கு அசையும் அல்லது அசையாச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு புலனாய்வு செய்வதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு மேற்குறித்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்கூறிய காரணங்களால் சொத்துக்கள் சேதங்கள் அல்லது இழப்புக்களுக்குள்ளான எவரேனும் இருப்பின் அவை தொடர்பாக மேற்குறித்த ஆணைக்குழுவுக்கு உரிமைக் கோரலொன்றை சமர்ப்பிக்க முடியும். அவ்வாறான கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கும் எவரேனுமொருவர் இப்பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய கேட்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் சமர்ப்பிக்க முடியும். குறித்த முறைப்பாட்டில் வழங்கப்பட்டுள்ள விபரங்களை உறுதிப்படுத்தி அனைத்து முறைப்பாடுகளும், முறைப்பாட்டாளர் சத்தியப்பிரமாணத்தின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பப்பட வேண்டியதுடன், அதனை ஆணைக்குழுவின் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது பொதிகள் சேவைகள் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து சமர்ப்பித்தல் வேண்டும். 2022 ஜுலை மாதம் 08 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

எழுத்துமூலமான முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், சாட்சியங்கள் வழங்கத் தேவையெனக் கருதும் பட்சத்தில் ஆணைக்குழுவுக்கு எந்தவொரு நபரும் அழைக்கப்படலாம். வாய்மூல சாட்சியங்கள் வழங்கும் தினங்கள் குறித்த நபர்களுக்கு உரியவாறு அறிவிக்கப்படும்.

ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சிகளை வழங்கும் எந்தவொரு நபருக்கும், திருத்தப்பட்ட 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சாட்சியங்களுக்கான சிறப்புரிமைகள் மற்றும் திருத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களின் உரிமைகள் மற்றும் உரித்துடைமைகளும் கிடைத்தல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் கட்டளைப்படி**

**ஆணைக்குழுவின் செயலாளர்**
**2022 ஜுன் மாதம் 15 ஆம் திகதி**

முகவரி : முதலாம் மாடி, இல 05 கட்டிடம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபம், கொழும்பு 07.

**தொலைபேசி இலக்கம் : 0112669135**
**தொலைநகல் இலக்கம் : 0112677673**
**வலைத்தளம் : www.pcildv.gov.lk**
**மின்னஞ்சல் : pcildv@gmail.com**

**2022 மார்ச் 31 தொடக்கம் மே 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிவாகிய வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான படிமுறைகளை தீர்மானிப்பதற்கான விசாரணை ஆணைக்குழு**

# இழப்பீட்டு விண்ணப்பப் படிவம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **விண்ணப்பதாரியின் விபரங்கள்** | | | | | | | |
| முழுப்பெயர் | | | | | | | |
| முதலெழுத்துக்களுடன் பெயர் | | | | | | | |
| தேசிய அடையாள அட்டை | | | | | | | |
| வதிவிட முகவரி | | | | | | | |
| தொலைபேசி இலக்கம் | நிரந்தர | | கையடக்கத் தொலைபேசி | | அலுவலகம் | | |
| மின்னஞ்சல் | | | | | | | |
| சொத்தின் தன்மை | உரிமையாளர் | | அரச | | வேறு | | |
| உரிமையாளரின் உரித்தை உறுதிப்படுத்தும் காணி உறுதி விபரம் | | | | | | | |
| **சொத்தின் அமைவிடம் தொடர்பான விபரம்** | | | | | | | |
| சொத்தின் அமைவிடம் தொடர்பான விபரம் | | | | | | | |
| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | | | கிராம உத்தியோகத்தர் பிரிவு | | | |
| வீதவரி இலக்கம் | வீதி | | | உள்ளூராட்சி மன்றம் | | | |
| **பாதிப்பு ஏற்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரம்** | | | | | | | |
| பாதிப்பு ஏற்பட்ட திகதி | அண்ணளவான நேரம் | | | பாதிப்பின் தன்மை | | | |
| | | | | தீவைக்கப் பட்டதா | | உடைத்து நொறுக்கப் பட்டதா | ஏனைய |
| பாதிப்பின் தன்மை | சிறிய | | நடுத்தர | | மோசமாக | | முழுமையாக |
| பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பின் | பொலிசு நிலையம் | | திகதி | | நேரம் | | முறைப்பாட்டு இலக்கம் |
| கட்டிடத்தின் விபரம் | ஒரு மாடி | | இரண்டு மாடி | | மாடிகளின் எண்ணிக்கை | | கட்டிடத்தின் வயது |
| கட்டிடத்தின் வரைபட அனுமதி | உண்டு | | இல்லை | இணக்கச் சான்றிதழ் | உண்டு | | இல்லை |
| பயன்பாட்டு தன்மை | வணிக | | அலுவலக | | வதிவிட | | வேறு |
| சொத்தின் சராசரிப் பெறுமதி | | | இழப்பின் சராசரிப் பெறுமதி | | | | |
| காப்புறுதி | உண்டு | | இல்லை | காப்புறுதி இருப்பின் | பத்திர இலக்கம் | | பெறுமதி |
| **பாதிக்கப்பட்ட அசையும் சொத்துக்கள்** | | | | | | | |
| சொத்தின் தன்மை | வாகனம் | | இயந்திரோபகரணங்கள் | | வேறு | | |
| பாதிப்பின் தன்மை | தீவைப்பா | | உடைத்து நொறுக்கப்பட்டதா | | வேறு | | |
| சொத்துப் பாதிப்பின் அளவு | சிறிய | | நடுத்தர | | மோசமாக | | முழுமையாக |
| சொத்தின் சராசரிப் பெறுமதி | | | இழப்பின் சராசரிப் பெறுமதி | | | | |
| காப்புறுதி | உண்டு | | இல்லை | காப்புறுதி இருப்பின் | பத்திர இலக்கம் | | பெறுமதி |
| பாதிப்பு ஏற்பட்ட திகதி | | | பாதிப்பு ஏற்பட்ட இடம் | | | | |
| பொலிசில் முறைப்பாடு செய்திருப்பின் | பொலிசு நிலையம் | | திகதி | | நேரம் | | முறைப்பாட்டு இலக்கம் |
| **சொத்து இழப்பு விபரங்கள் மற்றும் கோரப்படும் இழப்பீடு** | | | | | | | |

................................................ விண்ணப்பதாரரின் கையொப்பம்

................................... திகதி

* கட்டிடத்தினுள் பாதிப்புக்குள்ளான பொருட்களின் பட்டியலை இத்துடன் இணைப்பாக சமர்ப்பிக்கவும்.

# கிழக்கின் குரல்



# வெருகல் உப்பூரல் பகுதியில் கடும் காற்று; 38 வீடுகள் பகுதியளவில் சேதம்

**றொட்டவெவ குறூப், தோப்பூர் குறூப் நிருபர்கள்**







திருகோணமலை வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சீனன்வெளி, உப்பூரல் பகுதியில் மழையுடன் வீசிய கடும் காற்றுக் காரணமாக 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனன்வெளி பிரதேசத்தில் 21 வீடுகளும், உப்பூரல் பிரதேசத்தில் 17 வீடுகளினதும் வீட்டுக் கூரைகள் நேற்று (14) மாலை காற்றினால் சேதமாகியுள்ளமை குறிப்பிட்டத்தக்கதாகும்.

அத்தோடு சீனன்வெளி கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் பல காற்றினால் கடலில் இழுத்துச் செல்லப்பட்டு உடைந்துள்ளதோடு, படகுகளின் இயந்திரங்களும் சேதமாகியுள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உப்பூரல் பிரதேசத்தில் பலத்த மழையுடன் கூடிய மழை பெய்து வந்த போது காற்று மிகவும் வேகமாக வீசியது. இதனால் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், மீனவர்களின் வள்ளங்கள் சில உடைந்துள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். இதேவேளை மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

பலத்த காற்றுடன் கூடிய மழையினால் ஏற்பட்ட சேத விபரங்களை வெருகல் பிரதேச செயலகம் ஊடாக திரட்டி வருவதாகவும் இதுவரைக்கும் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

அத்துடன் பாதிப்புக்குள்ளானவர்கள் குறித்து தகவல்களை பெற்று மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனையின் பேரில் வெருகல் பிரதேச செயலாளரின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



மண்முனைப்பற்று ஆரையம்பதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (15) காலை பெற்றோலுக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்த போது. (படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# கார் வீதியை விட்டு விலகி விபத்து; 6 பேர் வைத்தியசாலையில் அனுமதி

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலைஹொரவ்பொத்தானை பிரதான வீதி சுகதகம பகுதியில் காரொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து நேற்று (15) அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பொஷன் நிகழ்விற்காக அனுராதபுரம் சென்று மீண்டும் வீடு திரும்பிய போதே கார் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரில் மூவர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கணவர், மனைவி, பிள்ளை ஆகிய மூவரும் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் விபத்து தொடர்பிலான விசாரணைகளை ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இடமாற்றத்தை இரத்துச் செய்யவும்; மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

**காரைதீவு குறூப் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் கல்முனை வலயத்தில் இருந்து அண்மையில் இடமாற்ற கடிதங்களை பெற்ற 55 ஆசிரியர்கள் இன்றைய பொருளாதார நெருக்கடி மிகுந்த சூழலில் எங்களை இடமாற்றம் செய்ய வேண்டாம் என்று கூறி அந்த இடமாற்றத்தை இரத்து செய்யுமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி. அப்துல் அசிஸ்ஸிடம் குறித்த ஆசிரியர்கள் மகஜரை கையளித்துள்ளனர்.

குறித்த 55 ஆசிரியர்களும் கையளித்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது.

கிழக்கு மாகாணத்தில் இன்றைய மோசமான கால கட்டத்தில் எந்த ஒரு வலயத்திலும் இவ்வாறான மனிதாபிமானமற்ற இடமாற்றம் இடம்பெறவில்லை. ஆனால் கல்முனை வலயத்தில் மாத்திரமே 98 பேர் ஆசிரியர் இடமாற்றத்திற்கு குறிப்பிடப்பட்டிருந்தது. இறுதியில் 55 பேர் மாத்திரமே இந்த இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இன்றைய எரிபொருள், பொருளாதார நெருக்கடி போன்ற பாரிய பிரச்சினைகள் நிலவும் கால கட்டத்தில் எங்களை 40 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய இடமாற்றம் வழங்கப்பட்டது.

இன்றைய சூழலில் அவ்வளவு தூரம் பயணம் செய்து எம்மால் திருப்தியான கற்பித்தலை செய்ய முடியாது உள்ளது.

குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்ட பெண் ஆசிரியர்களும் இந்த 40 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட தூரம் சென்று கற்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனிதாபிமானம் கருதி இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோருகின்றோம் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருமலை தளவைத்தியசாலை அம்பியூலன்ஸ் சாரதி கூரை மேல் ஏறி ஆர்ப்பாட்டம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலை தள வைத்தியசாலை கட்டடத்தின் கூரை மேல் ஏறி அம்பியூலன்ஸ் வண்டி சாரதியொருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றமானது முறையற்ற விதத்தில் சட்டத்துக்கு முரணான முறையில் தன்னை வேறொரு வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை தள வைத்தியசாலை பணிப்பாளருக்கு எதிராகவும் தனது இடமாற்றத்தை இரத்து செய்யுமாறு கோரியும் குறித்த நபர் நேற்று (15) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கெமுனுதுமிந்த திலக (வயது 42) என்ற அம்பியூலன்ஸ் வண்டி சாரதி திருகோணமலை வைத்தியசாலையில் எட்டு வருடத்துக்கும் மேலாக கடமையாற்றிய நிலையில் தன் மீதான பொய் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குறித்த இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அதற்கான தண்டனையை தான் அனுபவிக்க தயாராக இருப்பதாகவும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரித்து தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் சரியான நீதி கிடைக்க வேண்டும் எனவும் தனது முறையற்ற இடமாற்றத்தை இரத்து செய்யுமாறும் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பணிப்பாளர் வைத்தியர் ஐ.டபிள்யூ.எம்.ஜே.விக்ரமரத்னவிடம் கேட்ட போது,

குறித்த சாரதி தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் என்ற வகையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த சாரதியின் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



கிண்ணியா சூரங்கல் பிரதேசத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனமான அல் ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனினால் செவ்வாய்க்கிழமை (14) தெரிவு செய்யப்பட்ட வீடில்லாத ஏழு குடும்பங்களுக்கு வீடமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது. IHH NEDERLAND அனுசரணையுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மிக வறிய ஏழு குடும்பங்களுக்கு ஏழு வீடுகள் எட்டு இலட்சம் பெறுமதியில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.இவ்வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் அல் ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் தலைவரான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ் இனால் நடப்பட்டது. (படம்: கிண்ணியா தினகரன் நிருபர்)

போக்குவரத்து சிரமங்களை கருத்தில் கொண்டு

# கைவிரல் அடையாள முறையை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை

**இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்**

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**





எரிபொருள் சிக்கல் காரணமாக தூர இடங்களில் உள்ள ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுப் போக்குவரத்துக்காகப் பயன்பாட்டிலுள்ள வாகனங்களின் குறைவு மற்றும் தாமதம் காரணமாக உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது. இவ்வாறான அசாதாரண சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளில் வழக்கிலுள்ள கைவிரல் அடையாள இயந்திர நடைமுறையினை இரத்துச் செய்யுமாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சுக்கு கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

கல்வியமைச்சுக்கு சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைக்கு காலம் தாழ்த்தி சென்று பதிவிடும் நேரத்தை கைவிரல் அடையாள இயந்திரங்கள் கணக்கிடுவதனால் தேவையற்ற கட்டாய விடுமுறையினை ஆசிரியர்கள் அனுவிக்க வேண்டி வருகின்றது. மலையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதத்தது போன்ற நிலைக்கு ஆசிரியர்கள் ஆளாகி வருகின்றனர். இந்நிலை தொடருமானால் நல்லதொரு மனநிலையில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத சூழ்நிலையேற்படுகிறது. இந்நிலையிலிருந்து விடுவிப்பதற்காக பாடசாலைகளில் நடைமுறைகளில் உள்ள குறிப்பாக வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் உள்ள கைவிரல் அடையாள இயந்திர நடைமுறையினை இரத்துச் செய்யுமாறு அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் உள்ள சில அதிபர்கள் நாட்டின் சூழ்நிலைகளைக் கவனத்தில் எடுக்காது மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்ளவதாகவும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறான அதிபர்கள் தொடர்பில் எமது சங்கம் தகவல்களைத் திரட்டி வருவதாகவும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# இளைஞர் கழகத்தின் நிருவாக தெரிவும் பொதுக் கூட்டமும்

**சாய்ந்தமருது விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிருவாக தெரிவும் பொதுக் கூட்டமும் இன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் மாலை 02.30 மணிக்கு நடைபெறும்.

புதிய நிருவாக தெரிவும் பொதுக் கூட்டமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் பீ.முகம்மட் றியாத் தலைமையில் நடைபெறும். 2022ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களில் இருந்து அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய நிருவாகிகள் தெரிவு செய்யும் கூட்டத்திற்கு தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர், உப செயலாளர், உபதலைவர் எனும் பதவியில் இருந்து 4 பேர் கலந்து கொள்ள முடியும்.

# காவத்தமுனையில் மின்சாரம் தாக்கி குடும்பப் பெண் பலி

**கல்குடா தினகரன் நிருபர்**

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காவத்தமுனையில் மின்சாரம் தாக்கியதில் குடும்ப பெண்ணொருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

காவத்தமுனை மையவாடி வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான அகமது உசனார் லத்தீபா (வயது 51) என்ற குடும்ப பெண்ணே உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 6 மணியளவில் வீட்டு வேலைகளை செய்வதற்காக வெளியில் வந்து வீட்டிற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள கூடாரத்தின் கம்பியில் கை வைத்த சமயத்தில் மின்சார ஒழுக்கு காரணமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

மின்சார வயர் கூடாரத்திலுள்ள தகரத்தில் பட்டு சிதைவடைந்து இருந்த நிலையில் மின்சாரம் தாக்கியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

மின்சாரம் தாக்கிய பெண்ணை குடும்ப உறவினர்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கட்டுப்பாட்டு விலையை கடைப்பிடிக்காத வர்த்தகர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு அரிசியினை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு வருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையையடுத்து மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாதவகையில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

2283/43ஆம் இலக்க 10.06.2022ம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் 210 ரூபாய் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ளது.

அரிசியினை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து சில வர்த்தகர்கள் கூடுதலான விலைக்கு அரிசியினை விற்பனை செய்வதாக பொது மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை 1977 அல்லது மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபையின் 0632222355 எனும் தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்க முடியுமென தெரிவித்தார்.

## விநாயகர் விளையாட்டு கழகம் சம்பியன்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

திருக்கோவில் சுப்பர் ஸ்டார் விளையாட்டுக்கழகம் நடாத்திய இரவு நேர மின்னொளியிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் சம்பியனாக விநாயகபுரம் விநாயகர் விளையாட்டு கழகம் தெரிவு செய்யப்பட்டது.

திருக்கோயில் சுப்பர் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 35ஆவது வருட நிறைவையொட்டி அக்கழகம் நடாத்திய கிரிக்கெட் சுற்றுத்தொடரில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த பிரபல்யமான 32 கழகங்கள் பங்கு பற்றியிருந்தது.

இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் விநாயகபுரம் விநாயகர் கழகமும், திருக்கோவில் உதய சூரியன் கழகமும் தெரிவாகியிருந்தனர்.

இறுதிப் போட்டியிலே முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் விளையாட்டுக்கழகம் தங்களுக்கு வழங்கப்பட்ட 10 ஓவர்களுக்கு 89 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டு கழகம் 10 ஓவர்களில் 78 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால், 11 ஒட்டங்களினால் விநாயகர் கழகம் வெற்றி வாகை சூடியதுடன் வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப் பரிசில்களையும் விநாயகர் கழகம் பெற்றுக் கொண்டது. இறுதிப்போட்டிக்கு பிரதம அதிதியாக திகாமடுல்ல மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உட்பட இன்னும் பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ........
வாக்களித்தவர் பெயர் : ........
முகவரி : ........
மொபைல் இல. : ........

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 18-06-2022 இல. 12



MOBILE
வேகத்திலும் அதிவேகமான மொபைல் வலையமைப்பு.
இன்றே SLT-MOBITEL உடன் இணையுங்கள்!
SLTMOBITEL



# மெக்ஸ்வெலின் ஆட்டத்தோடு ஆஸிக்கு வெற்றி

## இரண்டாவது ஆட்டம் இன்று கண்டியில்

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

இரு அணிகளும் மோதுகின்ற ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி இன்று வியாழக்கிழமை (16) நடைபெறுகின்றது.

அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகள் இடையிலான ஒருநாள் தொடரின் முதல் போட்டியில், அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கிளன் மெக்ஸ்வெலின் அதிரடி ஆட்டத்தோடு 2 விக்கெட்டுக்களால் வெற்றியினைப் பதிவு செய்திருக்கின்றது.

மேலும் இந்த வெற்றியுடன் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் 1-0 என முன்னிலை அடைந்திருக்கின்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸி. கிரிக்கெட் அணி ரி 20 தொடரின் பின்னர் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகின்றது. அதன்படி இந்த ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்றுமுன் தினம் (14) கண்டியில் ஆரம்பமாகியது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் தசுன் ஷானக்க முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை தமது தரப்பிற்காகப் பெற்றார்.

இப்போட்டியில் இலங்கை அணிக்காக 19 வயது நிரம்பிய சகலதுறைவீரரான துனித் வெலால்கேவிற்கு, சர்வதேச அறிமுகம் வழங்கப்பட்டிருக்க ஆஸி. அணியில் பெட் கம்மின்ஸ், மார்னஸ் லபச்சேனே ஆகியோர் இணைந்திருந்தனர்.

### இலங்கை அணி

தனுஷ்க குணத்திலக்க, பெதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், துனித் வெலால்கே, சரித் அசலன்க, தனன்ஞய டி சில்வா, தசுன் ஷானக்க (அணித்தலைவர்), வனிந்து ஹஸரங்க, சாமிக்க கருணாரட்ன, துஷ்மந்த சமீர, மஹீஷ் தீக்ஷன

### ஆஸி. அணி

ஆரோன் பிஞ்ச் (தலைவர்), டேவிட் வோர்னர், ஸ்டீவ் ஸ்மித், மார்னஸ் லபச்சேனே, அலெக்ஸ் கெரி (விக்கெட் காப்பாளர்), மார்கஸ் ஸ்டொய்னிஸ், கிளென் மேக்ஸ்வெல், அஸ்டன் ஏகார், பெட் கம்மின்ஸ், ஜை றிச்சர்ட்சன், ஜோஷ் ஹேசல்வூட்

தொடர்ந்து நாணயச் சுழற்சிக்கு அமைய முதல் துடுப்பாட்டத்தினை ஆரம்பித்த இலங்கை அணிக்கு பெதும் நிஸ்ஸங்க, தனுஷ்க குணத்திலக்க ஜோடி மிகவும் அழகிய ஆரம்பத்தினை வழங்கியது.

அதன்படி இரண்டு வீரர்களும் அரைச்சதம் விளாச இலங்கை அணியின் முதல் விக்கெட் இணைப்பாட்டமாக 115 ஓட்டங்கள் பெறப்பட்டது. இலங்கை அணியின் முதல் விக்கெட்டாக ரன் அவுட்டில் ஆட்டமிழந்த தனுஷ்க குணத்திலக்க தன்னுடைய 11ஆவது ஒருநாள் அரைச்சதத்துடன் 53 பந்துகளில் 7 பௌண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

குணத்திலக்கவின் பின்னர் அஸ்டன் ஏகாரின் பந்துவீச்சில் இலங்கை அணியின் இரண்டாவது விக்கெட்டாக பெதும் நிஸ்ஸங்க ஆட்டமிழந்தார். பெதும் நிஸ்ஸங்க ஆட்டமிழக்கும் போது அவரின் 3ஆவது அரைச்சதத்துடன் ஒரு சிக்ஸர் மற்றும் 6 பௌண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களை எடுத்திருந்தார். இதனையடுத்து புதிய துடுப்பாட்டவீரராக களம் வந்த தனன்ஞய டி சில்வா வெறும் 7 ஓட்டங்களுடன் வெளியேற, குசல் மெண்டிஸ் மற்றும் சரித் அசலன்க ஆகியோர் பொறுமையான முறையில் இலங்கை அணியின் நான்காம் விக்கெட்டுக்காக இணைப்பாட்டம் ஒன்றினை உருவாக்கினர்.

77 ஓட்டங்கள் வரை நீடித்த சரித் அசலன்க – குசல் மெண்டிஸ் ஜோடியின் இணைப்பாட்டம் சரித் அசலன்கவின் விக்கெட்டோடு முடிவுக்கு வந்தது. இலங்கை அணியின் 4ஆம் விக்கெட்டாக ஜை ரிச்சர்ட்ஸனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்த சரித் அசலன்க 37 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அதனையடுத்து அதிரடியாக ஆடத்தொடங்கிய குசல் மெண்டிஸ் மற்றும் புதிய துடுப்பாட்ட வீரர் வனிந்து ஹஸரங்க ஆகியோரின் அபார ஆட்டத்தோடு இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் சார்பில் குசல் மெண்டிஸ் இறுதிவரை ஆட்டமிழக்காது நின்றதோடு தன்னுடைய 18ஆவது ஒருநாள் அரைச்சதத்துடன் ஒரு சிக்ஸர் மற்றும் 8 பௌண்டரிகள் அடங்கலாக 86 ஓட்டங்கள் பெற்றார்.

மறுமுனையில் வனிந்து ஹஸரங்க, ஜை ரிச்சர்ட்ஸனின் 49ஆவது ஓவரில் 5 தொடர் பௌண்டரிகள் அடங்கலாக மொத்தம் 6 பௌண்டரிகள் உடன் 19 பந்துகளில் 37 ஓட்டங்கள் பெற்றார்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு சார்பில் அஸ்டன் ஏகார் மற்றும் மார்னஸ் லபச்சேனே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றினர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 301 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு ஆரம்பத்தில் மகீஷ் தீக்ஷன நெருக்கடி உருவாக்கினார். அந்தவகையில் மகீஷ் தீக்ஷனவின் பந்துவீச்சில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தமது முதல் விக்கெட்டாக டேவிட் வோர்னரின் விக்கெட்டினை அவர் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் பறிகொடுத்தது.

இதன் பின்னர் அணித்தலைவர் ஆரோன் பின்ச் சிறந்த ஆட்டத்தினை வெளிப்படுத்த ஸ்டீவ் ஸ்மித்தும் தனது ஆட்டத்தின் மூலம் ஆஸி. அணிக்கு பெறுமதி சேர்த்தார்.

பின்னர் 41 பந்துகளுக்கு 44 ஓட்டங்களைப் பெற்ற ஆரோன் பின்ச் வனிந்து ஹஸரங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க, போட்டியில் மழையின் குறுக்கீடும் ஏற்பட்டு வெற்றி இலக்கு 44 ஓவர்களுக்கு 282 ஓட்டங்களாக மாற்றப்பட்டது. இதனையடுத்து ஸ்டீவ் ஸ்மித் இன்றைய போட்டியில் அறிமுகமான துனித் வெலால்கேவின் விக்கெட்டாக மாறினார். ஸ்மித் ஆட்டமிழக்கும் போது தன்னுடைய 26ஆவது ஒருநாள் அரைச்சதத்துடன் 60 பந்துகளில் 5 பௌண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர்களான வனிந்து ஹஸரங்க மற்றும் துனித் வெலால்கே ஆகியோர் நெருக்கடி ஏற்படுத்திய போதும் மார்கஸ் ஸ்டொய்னிஸ், கிளேன் மெக்ஸ்வெலின் அதிரடியான துடுப்பாட்டத்தோடு அவுஸ்திரேலிய அணி போட்டியின் வெற்றி இலக்கினை 42.3 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களுடன் அடைந்தது.

அவுஸ்திரேலிய அணியின் வெற்றியினை உறுதி செய்த கிளன் மெக்ஸ்வெல் தன்னுடைய 23ஆவது ஒருநாள் அரைச்சதத்துடன் 51 பந்துகளில் 6 சிக்ஸர்கள் மற்றும் 6 பௌண்டரிகள் அடங்கலாக 80 ஓட்டங்களை எடுத்திருந்தார். மறுமுனையில் மார்கஸ் ஸ்டொய்னிஸ் 31 பந்துகளுக்கு 2 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக 44 ஓட்டங்களை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் பந்துவீச்சு சார்பில் வனிந்து ஹஸரங்க 4 விக்கெட்டுக்களையும், துனித் வெலால்கே 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருக்க மகீஷ் தீக்ஷன மற்றும் அணித்தலைவர் தசுன் ஷானக்க ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சாய்த்திருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டவீரரான கிளன் மெக்ஸ்வெல் தெரிவாகினார்.



# வெற்றியின்றி நாடு திரும்பும் இலங்கை உதைபந்தாட்ட அணி

மாலைதீவுகளுக்கு எதிராக உஸ்பகிஸ்தானின் மர்கஸிய் அரங்கில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் ஆசிய கிண்ண தகுதிகாண் மூன்றாம் சுற்றுக்கான தமது கடைசிப் போட்டியில் இலங்கை கால்பந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தள்ளது.

இலங்கை அணி இந்த தகுதிகாண் தொடரில் எந்தவித வெற்றியும் பெறாமல் 3 தோல்விகளுடன் நாடு திரும்புகின்றது.

இதற்கு முன்னர் இந்த தொடரில் இலங்கை வீரர்கள் உஸ்பகிஸ்தான் அணியிடம் 3-0 எனவும், தாய்லாந்து அணியிடம் 2-0 எனவும் தோல்வியடைந்திருந்தனர்.

மாலைதீவுகள் அணி முதல் போட்டியில் 3-0 என தாய்லாந்து அணியிடமும், உஸ்பகிஸ்தானிடம் 4-0 எனவும் தோல்வியடைந்திருந்தது. இந்தப் போட்டியானது இவ்விரு அணிகளும் தமது முதல் வெற்றியைப் பதிவு செய்வதற்காக ஒன்றையொன்று சந்தித்தன.

கடந்த இரண்டு போட்டிகளிலும் மஞ்சள் அட்டை பெற்ற இலங்கை அணியின் தலைவர் சுஜான் பெரேராவுக்கு இந்த போட்டியில் விளையாட முடியாத நிலை ஏற்பட, கவீஷ் லக்பிரிய பெர்னாண்டோ இந்தப் போட்டியில் இலங்கை அணியின் கோல் காப்பாளராக செயற்பட்டார்.

முன்னைய இரண்டு போட்டிகளிலும் முதல் பதினொருவராக விளையாடிய சபீர் ரசூனியா மற்றும் சசன்க டில்ஹார ஆகியோருக்குப் பதிலாக சிரேஷ்ட வீரர் மொஹமட் பசால் மற்றும் மரியதாஸ் நிதர்சன் ஆகியோர் இந்தப் போட்டியில் இலங்கை அணியின் முதல் பதினொருவரில் களமிறங்கினர்.

போட்டியின் ஆரம்பம் முதல் இரண்டு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சிக்காக வேகமாக செயற்பட்டனர். குறிப்பாக, இலங்கை அணியை விட அதிக ஆதிக்கம் செலுத்திய மாலைதீவுகள் வீரர்கள் இலங்கை கோல் எல்லையில் பல கோல் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இரண்டு அணி வீரர்களும் ஒரு முறையாவது எதிரணியின் கோல் காப்பாளர்களை பரிசோதிக்காத நிலையில் முதல் பாதி கோல் இன்றி நிறைவடைந்தது.

போட்டி 60 நிமிடங்களை அண்மித்த நிலையில் இலங்கை அணிக்கு எதிரணியின் மத்திய களத்தில் இருந்து கிடைத்த ப்ரீ கிக்கின்போது உதைந்த பந்து மாலைதீவுகள் கோல் எல்லைக்கு வெளியில் வைத்து அவ்வணியின் ஹுஸைன் நிஹானின் கைகளில் பட்டமைக்கு இலங்கை அணிக்கு மீண்டும் பிரீ கிக் வாய்ப்பு கிடைத்தது.

இதன்போது வாய்ப்பைப் பெற்ற மொஹமட் பசால் பாதத்தின் முன் பக்கத்தினால் கோல் நோக்கி செல்லும் வகையில் உதைந்த பந்தை மாலைதீவுகள் கோல் காப்பாளர் பைசால் பாய்ந்து வெளியே தட்டினார்.

அடுத்த இரண்டு நிமிடங்களில் மத்திய களத்தில் இருந்து இப்ராஹிம் ஹுஸைன் வழங்கிய பந்துப் ரிமாற்றத்தினால் சிரேஷ்ட வீரர் ஹம்ஸா மொஹமட் இலங்கை கோலுக்கு அருகில் பந்தை எடுத்துச் சென்று கவீஷின் தடுப்புக்கு கீழால் பந்தை கம்பங்களுக்குள் செலுத்தி போட்டியின் முதல் கோலைப் பெற்றார்.

அடுத்த சில நிமிடங்களில் இலங்கை அணிக்கு கிடைத்த கோணர் உதையின்போது உள்வந்த பந்து தடுக்கப்பட்டு டிலனிடம் வர, அவர் அதனை இரண்டு வீரர்களைத் தாண்டி முன்னோக்கி எடுத்துச் செல்லும்போது பெனால்டி எல்லைக்குள் வைத்து முறையற்ற விதத்தில் வீழ்த்தப்பட்டார்.

இதனால் இலங்கை அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை டிலன் பெற்றார். அவர் கோலின் வலது பக்கத்தினால் செலுத்திய பந்தை மாலைதீவுகள் கோல் காப்பாளர் பைசால் தடுக்க, மீண்டும் அதனை ஷமோத் டில்ஷான் ஹெடர் செய்தபோது பந்து உயர்ந்து வெளியே சென்றது. எனவே, இலங்கை அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பு பைசாலால் தடுக்கப்பட்டது.

தொடர்ந்து 75 நிமிடங்கள் கடந்த நிலையில் மத்திய களத்தில் இருந்து டிலன் கோல் நொக்கி உதைந்த பந்து இடது பக்க கம்பத்தை விட சில அங்குலம் வெளியால் சென்றது.

அதன் பின்பும் இரு அணியினரும் கோலுக்கான முயற்சிகளை தொடர்ந்து எடுத்த போதும் அவற்றினால் எந்த பயனும் கிடைக்கவில்லை. எனவே, போட்டி நிறைவில் ஹம்ஸாவின் கோலின் உதவியுடன் 1-0 என வெற்றி பெற்ற மாலைதீவுகள் அணி தொடரில் தமது முதல் வெற்றியை சுவைக்க, இலங்கை அணி அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியடைந்த நிலையில் தொடரில் முடித்துக் கொண்டது.

ாழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுன் மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.